1-3-1952 M.V.M M BANGALORE 2


# போர்வாள்

வாள் 5 வீச்சு 23

1-3-52 சனிக்கிழமை

ஆசிரியர்கள்:
காஞ்சி. மணிமொழியார்
இரா இளஞ்செழியன் B.A.Hons

துணை ஆசிரியர்:
காஞ்சி. கல்யாணசுந்தரம்

விலை அணா 2


# பாட்டாளி சமூகம்—ஒரு கேள்விக்குறி!

[ இரா. நெடுஞ்செழியன் ]

உலகப் பாட்டாளி சமூகமே இன்று ஒரு கேள்விக்குறியாகக் காட்சியளிக்கிறது! ஒரு காலம் இருந்தது, பாட்டாளி வர்க்கம் முற்றுப்புள்ளியாக முடங்கிக் கிடந்த காலம்; சென்ற இரண்டு நூற்றாண்டு காலத்தில், உழைத்துழைத்து உயிரை வாழ்வுக்கு அடகு வைத்துத் தாழ்ந்த பாட்டாளி மக்கள், தாங்களும் இவ்வுலகில் மக்களாக வாழப்பிறந்தவர்கள்தாம் என்றும், வாழ்வின் பயனை நுகரவேண்டிய உரிமையில் தமக்கும் பங்கு உண்டு என்றும் உணர்ந்து, உணர்ச்சிபெற்று வீறிட்டெழுந்தனர். இந்தக் காலத்தில்தான் பாட்டாளி உலகம், ஆச்சரியக்குறியாகக் காட்சியளித்தது! முற்றுப்புள்ளி ஆச்சரியக் குறியாகி, ஆச்சரியக்குறி கேள்விக்குறியாகி யிருக்கிறது! கேள்விக்குறி அபாயக் குறியாக மாறும் கட்டம், சில இடங்களில் நிறைவேற்றப்பட்டும், வேறு இடங்களில் நிறைவேற்றி வைப்பதற்கான முயற்சிகளில் ஈடுபட்டும் பாட்டாளி உலகம் உழன்று வருகிறது!

உண்மை உலகம், உழைப்போர் உலகம் நோக்கிச்சுழன்று வருகிறது. உலகம் உழைப்பாளிகளுக்கு உரிமையுடையது, என்ற கருத்து உழைப்போர் சமூகத்தை இழுத்துக் கொண்டு முன்னேறுகிறது.

பாட்டாளி உலகம் விம்மி எழும் அளவுக்கு, அதற்கு ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக அநீதி இழைக்கப்பட்டு வந்திருக்கிறது!

“அவர்கள் காணத்தகுந்தது வறுமையாம். பூணத்தகுந்தது பொறுமையாம்' என்று புத்துலகக் கவி பாரதிதாசன் கூறியது போல் பாட்டாளிகளின் நிலை ஆக்கப்பட்டிருக்கிறது. நாகரிக உலகம் என்று கூறப்படுவது அவர்களைத் திரும்பிப் பாராமலேதான் நகர்ந்து வந்திருக்கின்றது.

பாட்டாளியின் வாழ்வு ஏன் துன்பப்படுகுழியில் தள்ளப்பட்டிருக்கிறது? அவன் உழைத்தும் உழைப்பின் பலனைத் தான் நுகரமுடியாமல், சேர்த்துவைக்கும் தேனைத் தான் குடிக்க வாய்ப்பு ஏற்படும் முன்பே, பிறரால் கவரப்பட்டு தேனீ வருந்துவது போல வாழ வேண்டியவனாக இருக்கிறான். பாட்டாளி துன்பப் படுகுழியில் வீழ்ந்து தத்தளிக்கத் தத்தளிக்கப் பணக்காரன் இன்பபுரியில் உல்லாசப் பயணம் புரியத் தொடங்குகிறான். ஏன் இந்த வேறுபாடு? உழைப்பவன் உழைப்பின் பலனைப் பெறமுடியவில்லை; ஆனால் உல்லாசச் சீமான் அந்த உழைப்பின் பலனை உழைக்காமலே நுகர முடிகிறது. இந்த முறை வருவானேன்? குடிக்கக் கூழில்லை, குந்தக் குடிசையில்லை. காலில் செருப்பு இல்லை, கையிலொரு காசும் இலை, கடன் கொடுப்பார் யாரும் இல்லை என்ற ஏக்க விருத்தம் பாடும் நிலையில் பாட்டாளி; இருக்கும் சொத்துக்களை எண்ணிப் பார்க்க முடியாமல், மூன்றடுக்கு மாளிகையின் உச்சி மாடியில் நாலாந்தார மனைவியுடன் சபலமொழி பேசிப் பொருளைச் செலவழிப்பது எப்படி, பொற்கொடி மாதரின் புன்சிரிப்பைப் பெறுவதெப்படி என்ற ஏக்கவிருத்தம் பாடும் சீமான் மற்றோர்புறம். இரண்டும் ஏக்கவிருத்தந்தான்; என்றாலும் மாறுபட்ட தேவை குறித்து இரண்டும் எழுகின்றன. இது ஏன்? பிறக்கும் போது

(10-ம் பக்கம் பார்க்க)

# சர்க்கார் குமஸ்தா பேசுகிறார்!

★

ஒரு மனிதன் தன் உள்ளத்தில் உண்டாகிய எண்ணத்தை நிறைவேற்ற முடியாவிட்டால், அதைக் குறையாகவே எண்ணி மனங் குமுறுகிறான். இத்தகைய குறை பெரும்பாலும் எல்லோருக்கும் உண்டு. எனினும் என்போன்ற, குமாஸ்தாக்களுக்கு இருக்கும் குறையோ மிகமிக அதிகம்.

இந் நாட்டிலே மக்கள் பிரிவிலே பல சாதிகள் இருப்பது போலவே எங்கள் பணிமனைகளிலும் பாகுபாடுகள் உண்டு. ஆனால் இரண்டே பிரிவுதான் கஜெட்டபதிவுள்ள அதிகாரிகள்; பதிவில்லா அதிகாரிகள் என்று. முன்னவர் கலைநூற்புலமை பட்டம்பெற்று அதிக ஊதியமுடைய பதவிக்கு (நேரடியாக) பெரிய அதிகாரிகளின் தொடர்பினால் வேலையிலமர்வது. பின்னவர்களாகிய நாங்களோ அதே படிப்புப் படித்து பட்டம் பெற்றிருந்தபோதிலும், அதிகாரிகளின் தொடர்பின்மையினால் பதிவாகா ஊழியர்களாகவே பணியாற்றவேண்டியிருக்கிறது. இதனைத் 'தலைவிதி' என்று எண்ணுவார் விதியை நம்பும் வீணர்கள். நம் அதிர்ஷ்டம் அவ்வளவுதான் என்று அழுத்தந்திருத்தமாகக் கூறுவார்கள் அதிர்ஷ்டத்தில் அறிவிழந்த சிலர். ஆட்சியாளர்கள் வாய்ப்புத் தரவில்லை என்று எண்ணுவர் பகுத்தறிவுடைய பலர். ஆயினும் முடிவு ஒன்றுதானே.

உழைப்புக்குத் தகுந்த ஊதியம் கிடையாது. அதுகூட வேடிக்கையல்ல, சொந்த வீட்டை விட்டுப் புறப்பட்டு, பெற்றோர்களைப் பிரிந்து மற்றவர்களையும் மறந்து ஒரு சாண் வயிற்றுக்காக ஊரூராக அலைந்து பின் ஒரு வேலை கிடைத்தால் உழைப்புக்குத் தகுந்த ஊதியம் கிடைக்காவிட்டாலும், உண்பதற்குப் போதிய ஊதியம் கூட கிடையாது. இதைக் கொண்டுதான் நாங்கள் உயிர் வாழவேண்டும். இதைத் தவிர நாங்கள் வேறெந்த வழியிலும் வருவாய்த் தேடக்கூடாது, ஏனென்று கேட்கிறீர்களா? சட்டம் அப்படி. மற்றவர்களெல்லாம் செலவுக்குத் தக்க வருவாய்த் தேடிக்கொள்ளலாம்; ஆனால் நாங்கள் வருவாய்க்குத் தக்க செலவு செய்யவேண்டும்!


காலையில் எழுந்ததும் கடைக்குச் செல்லவேண்டும். நாங்களேதான் அரசாங்கத்திற்கு வேலை செய்கிறோமே எங்களுக்கு வேலைக்காரன் ஏது? பிறகு முதல்நாள் ஆபிசிலிருந்து கொண்டு வந்த வேலைகளை முடித்துக்கொண்டு ஆபீசுக்குப் போகவேண்டும். பத்து மணிக்கு வேலையை ஆரம்பித்தால் 5-மணிவரையில் ஒழியாது. ஆபீசர்களெல்லாம் 5-மணிக்கு போய்விடுவார்கள். நாங்கள் மட்டும் ஏழுமணி வரையில் வேலை செய்துவிட்டு மீதியை கையிலேயே வீட்டுக்குக் கொண்டு வந்து இரவில் செய்யவேண்டும். நாங்கள் மாலை நேரத்தை உல்லாசமாகக் கழிக்க முடியாது.

ஏழு மணிக்குமேல் வீட்டிற்கு வந்தாலோ இனிய முகத்துடன்தான் வரவேற்கின்றாள் எழிலுடை மனைவி. ஆனால் ஓயாது உழைத்துவரும் எங்களுக்கு இன்பம் ஏது? உல்லாசமாக கொஞ்சம்தூரம் சென்று வரலாமென்று துணைவி அழைத்தாலோ, உட்கார் என்று சொல்லத்தான் பலமிருக்கிறது. உண்டிக்குப் பின் கொண்டுவந்த வேலையை முடிக்கவேண்டும். எங்கள் வாழ்க்கைதான் இப்படியிருக்கிறதே, எங்கள்மீது மற்றவர்கள் சுமத்தும் குற்றமோ சுருக்கமாகச் சொல்லமுடியாது.

நாங்கள் ஏதோ லஞ்சம் வாங்குவதாக சில வழக்குகள் உண்டாகின்றன. லஞ்சம் வாங்கவேண்டுமென்ற எண்ணம் எந்த குமாஸ்தாவுக்கும் இராது. ஏதோ சிலர் வாங்குவதாக வழக்குகள் நடைபெறுகின்றன. இவன் லஞ்சம் வாங்கினான் என்று மாஜிஸ்ட்ரேட் முன்பு மெய்ப்பித்த உடனே ஆறு மாதம் கடுங்காவல் ஓராண்டு கடுங்காவல் என்று உத்தரவு பிறப்பிக்கிறாரே தவிர "நீ ஏன் லஞ்சம் வாங்கினாய்?" என்று இதுவரையில், கேட்டதேயில்லை மேலதிகாரி. ஏன் என்ற கேள்வியேதான் கோர்ட்டில் கிடையாதே!

அன்புடைய மனைவி ஆஸ்பத்திரியில் படுத்திருக்க, நாளை பணம் கட்டாவிட்டால் பரீட்சையில் உட்கார முடியாது என்று ஆசிரியரால் விரட்டப்பட்டமகன் தன்னைத்தொந்தரவு கொடுக்க, வழியிலே கடன்காரன் மறித்துக் கொள்ள, கந்தை வேட்டியும் வாரண்டதலையும் ஒட்டியவயிறும் உடைய குழந்தைகள் தன் கண்முன் தோன்ற இவைகளைக் கண்டு வருந்துகின்ற ஒரு குமாஸ்தா முன்பு சென்று ஒருவர், "அன்பரே என்மீது இரக்கம் வைத்து

(7-ம் பக்கம் பார்க்க)




கோமள வர்மன் தன் கதையைத் தொடர்ந்து கூறிட்டான்:

"நண்பரே, என் வாழ்க்கையில் ஏற்பட்டதாகக் கூறினேனே அந்தத் திருப்பத்தைப்பற்றி இப்பொழுது சொல்லப்போகிறேன். கவனமாகக் கேட்டுக்கொள்ளும். என் தாயார் படுத்த படுக்கையாகி விட்டாள். கூலிவேலை செய்து இரு வயிறுகளைக் கழுவிவந்த அவள் வியாதிப் பட்டுவிட்டதும் எங்கள் இருவரின் வயிற்றைக் கழுவும் பொறுப்பும், அன்னையை வியாதிப் படுக்கையில் கவனித்து உடல்நலம் அடைந்திடச் செய்யும் கடமையும் என்மீது அமைந்தவை யல்லவா? எனவே வேலைதேடினேன். உலகம் என்னை வெறுத்தொதுக்கிற்று! என் தந்தையின் மகனாக நானிருப்பதால் அது என்னைத் தூற்றியது! எங்கெங்கோ அலைந்து வேலை தேடினேன். ஒருவரும என்னை ஆதரிக்கவில்லை. பலநாட்கள் பட்டினி! என் தாயார் அந்த நிலையில் சாப்பாடு மருந்து ஏதுமின்றிப் பல நாட்களைக் கழிக்க நேர்ந்தது! அவளின் நிலை மிக மிக மோசமாகிவிட்டது! மரண வாயிலை நெருங்கும் போது அடைந்திடும் சுய வுணர்களல்லாத தன்மையை யடைந்து விட்டாள். அவள் கண்கள் விழிக்குழிகளின் மேற்புறத்திலே செருகிக்கொண்டன. அவைகளிலிருந்து இமைப்பில்லாத, உணர்வில்லாத பார்வை கிளம்பிட ஆரம்பித்தது! அவளால் பேசவும் முடியவில்லை. நான் அவள் எதிரே நின்று கண்ணீருடன் பேசும்போது அவள் என் முகத்தை உற்றுப் பார்த்திடுவாள். என் கண்ணீரைக் கண்டதும் உலர்ந்து வரண்டுபோன அவள் அதரங்கள் இலேசாக அசையும். அவள் உள்ளம் வார்த்தைகளை அவள் வாய்க்கு அனுப்பும். அவளைப் பிடித்துக்கொண்ட அந்த வியாதியின் வாட்டல் அவளைப் பேசவைக்காது! எவ்வளவு வேதனைதந்த காட்சி அது! அந்தக் காட்சியை என்னால் காணவும் முடிவதில்லை.

"ஒருநாள் வைத்திய ரொருவரிடம் சென்று அவரை என் தாயாரைக் கவனிக்க வரச்சொன்னேன் அவர் மறுத்துவிட்டார். பணம்! அதனால்தான் அவரை இயங்க வைக்கமுடியும்! நான் என்னசெய்வேன்? மனத்திலே வேதனை! வருத்தம்! குழப்பம் சிந்தனையிலே பலப்பல விசித்திரச் சுழிகள்! உடலிலே தளர்ச்சி! இந்த நிலையிலே வெகுநேரம் தனியே வீட்டுவாசலில் உட்கார்ந்து கொண்டிருந்தேன். என் மனம் என்னோடு பேசியது. சிந்தனையைத் தூண்டிவிட்டது. சிந்தனைக் கிளி சிறகடித்துப் பறந்தது! மீண்டும் அது என் உள்ளக் கூட்டிற்குத் திரும்பியபொழுது பலப்பல விசித்திரமான எண்ணப் பழங்களைக்கொண்டு வந்தது! அவைகளை அருந்தலாமா வேண்டாமா என்ற சிந்தனையில் வெகுநேரம் கழிந்தது. அப்பொழுது இரவு. பின்னிருட்டு நேரம். அன்று அமாவாசை. அடுத்த வீட்டுக்காரர்கள் அன்று காலை என் தாயார் அன்று இறந்துவிடலாம்; அமாவாசை யன்று அத்தகையோர் பிழைப்பது அரிது என்று பேசிக்கொண்டது என்காதிலும் விழுந்திருந்தது. திடீரென்று ஒருபுறத்திலிருந்து ஒரு உருவம் ஓடுவதைக்கண்டேன். அது எங்கள் தெருப்பக்கம் நோக்கி ஓடிவருவதைக் கண்டதும் நான் என் சிந்தனைக்கு ஒரு முத்தாய்ப்பு வைத்துவிட்டு அந்த உருவத்தைக் கவனிப்பதில் ஈடுபட்டு எழுந்து நின்றேன். அந்த உருவம் என்னைப் பார்த்துவிட்டிருக்கவேண்டும்! எனவே தான் அது வந்தவழியே திரும்பியோட ஆரம்பித்தது. அதன் முதுகிலே ஒரு சிறு மூட்டையும் இருப்பது எனக்குத் தெரிந்தது! நான் அந்த உருவத்தைத் துரத்திச் சென்றேன். காரிருளிலே வெகுதூரம் ஓடினேன். ஓடிக்கொண்டேயிருந்தேன். அந்த உருவம் ஒரு செடிப் புதரிலே தன்னைமறைத்துக்கொண்டிருந்ததை நான் பார்க்கவில்லை. நேரே ஓடிக் கொண்டிருந்தேன். திடீரென்று அந்த மனிதன் என்னைப் பின்புறத்திலிருந்து தாக்கினான். தாக்குதலைச் சகித்துக்கொண்டு நான் அவனோடு போரிட ஆரம்பித்தேன். இருவரும் உருண்டு புரண்டோம். சரியான அடியும் குத்தும் இருவருக்கும் கிடைத்தன. தன் உடைவாளால் என் மார்பைக் கிழிக்க முயன்ற அவனைக் கீழே தள்ளி, மூர்ச்சையுறுமாறு செய்துவிட்ட 'குத்து' ஒன்றை அவன் முகத்திலேவிட்டு, அவன் வைத்திருந்த மூட்டைகளையும், அந்த உடைவாளையும் எடுத்துக்கொண்டு நான் வீடு திரும்பினேன். அன்னை எந்த நிலையிலிருக்கின்றாளோ என்ற துன்ப எண்ணத்துடனேயே வீடு திரும்பினேன். அவள் மிகவும் சிரமத்தோடு மூச்சுவிட்டுக் கொண்டிருந்தாள். அவள் வெகு நேரம் என்னைக் கூப்பிட்டிருக்கவேண்டும்! அவள் என்னைப் பார்த்ததும் தனக்குத் தண்ணீர் வேண்டுமென்று சைகை காட்டினாள். நான் அவளுக்குத் தண்ணீர் கொடுத்துவிட்டு நடந்த விஷயங்களனைத்தையும் கூறி அந்த மூட்டைகளை ஆவலோடு அவிழ்த்தேன்.

"நண்பரே அந்த இரு மூட்டைகளிலும், பொன்னாபரணங்களும், வெள்ளி; தங்கம் முதலியவற்றாலாகிய நுண்மையான அழகுப் பொருட்களும், துகிலாடைகளும் நிறைய இருந்தன! அகல் விளக்கினால் சிறிது ஒளிபெற்றிருந்த அந்த எங்கள் குடிசை அந்தப் பளபளக்கும் ஆபரணங்களிலே தவழ்ந்த ஜொலிப்புக் கற்களினால் மிக்க ஒளி

(6-ம் பக்கம் பார்க்க)

# தவறு மட்டுமல்ல—தற்கொலை!

## நஷ்டம் மட்டுமல்ல—நாசவேலை!

"மேளம் பிரமாதமாயிருக்கணும். வெங்கு அய்யர்வாள், திருவீணபுரம் திருச்சிற்றம்பலத்தைக் கொண்டுவரலாமா? சரி, போய் ஏற்பாடுசெய்து அச்சாரம் ரூபாய் ஐந்து கொடுத்துவிட்டு வாரும்."

"பந்தல் அழகாய்ப் போடவேண்டும். தெரிகிறதாவேலப்பா, ஆயிரம் பேர் உட்கார்ந்து கச்சேரி கேட்க இடமிருக்க வேண்டும். வாழை, கமுகு, முதலியன கச்சிதமாய் அலங்கரிக்க வேண்டும். நடக்கட்டும்."

"ஓய், ராமய்யர், சங்கீதத்துக்கு நமது மணி அய்யர் கோஷ்டியை ஏற்பாடுசெய்திருக்கிறேன். நாட்டியத்துக்கு நமது தங்கைபெண் லலிதாவேபோதும். சரிதானே."

"யார் அது, பெரியசாமிப் பண்டாரமா, முகூர்த்தத்துக்கு நல்ல கெட்டியான முல்லை ஆரம் இரண்டு, நீளமான ரோஜாமாலை இரண்டு, மற்றும் செண்டு, கண்ணி, உதிரி முதலியன ஏராளமாய்க் கொண்டுவா."

"நல்ல சோமனைப் பார்த்து மாப்பிள்ளைக்கு ஒருஜோடி பட்டு வேஷ்டிகள், பெண்ணுக்குக் காஞ்சிபுரத்து மயில்கழுத்துப் புடவை, அதுதான் பெண்ணின் நிறத்துக்குப் பொருத்தமாயிருக்கும், வாங்கிவிட வேண்டியதுதான், என்ன பிள்ளைவாள்."

"வாரும் ஆச்சாரியார், நல்ல பொன்னிலே சங்கிலி, மாங்கல்யம், காப்பு, கொலுசு முதலியன செய்து கொடும். சீக்கிரம் ஆகட்டும்."

"எல்லாவற்றைக் காட்டிலும், சமையல் வெகு நேர்த்தியாய் இருக்க வேண்டும், குப்பய்யர்வாள், அதற்கு வேண்டிய சாமான்களுக்கு ஜாப்தா தயாரித்துக் கொடுத்துவிடும்."

என்று காரைவீட்டுக் கனகரத்தினம் அய்யர் தனது வீட்டுத் தாழ்வாரத்திலே, சாய்வு நாற்காலியில் அமர்ந்துகொண்டு வந்திருந்த ஒவ்வொருவருக்கும் வகைவகையாய்க்கட்டளை பிறப்பித்துக் கொண்டிருந்தார். அவருக்குப் பக்கத்தில் கழுத்தில் உருத்திராட்ச மணியணிந்து, மேலாடையை இடுப்பில் சுற்றி, கைகட்டி நின்று கொண்டிருந்தார் ஞானப்பிரகாசம்பிள்ளை.

---

[பாரதி சுப்பையா]

---

"நிகழும் சர்வதாரி ஆண்டு வைகாசிமாதம் 20-ந்தேதி புதன்கிழமை காலை $7\frac{1}{2}$ நாழிகைக்குள், சுபயோக சுபமுகூர்த்தத்தில் பெரியோர்கள் நிச்சயித்தபடி செல்வச் சிரஞ்சீவி அரசப்பனுக்கும் வேம்பு அம்மாளுக்கும் திருமாங்கல்ய தாரணம் நடைபெறும்' என்று மஞ்சள் காகிதத்தில் அச்சடித்த அழைப்பிதழ்கள் சகலருக்கும் அனுப்பப்பட்டன. கலியாணத்துக்கு வேண்டிய சகலகாரியங்களையும் தடபுடலாகச் செய்து கொண்டிருந்தார் கனகய்யர்.

நஞ்சை நிலங்களையுடைய ஒரு குளம் அதற்குப் பக்கத்திலே ஒரு விஷ்ணு ஆலயம், அதன் சன்னதியின் இருமருங்கும் வீடுகளமைந்த விசாலமான வீதி. ஒரு காலத்தில் அந்தாலோகமாய்க்காட்சியளித்த அந்த அக்கிரகாரம் இன்று குட்டிச் சுவர்களின் தொகுதியாய்க் காணப்பட்டது. அழிந்துபோன நிலையிலுள்ள அந்தப்பார்ப்பனச் சேரிக்கு கனகய்யரின் காரைவீடு சிறிது உயிர் கொடுத்துக்கொண்டிருந்தது.

கனகய்யர் மகாசாமர்த்தியசாலி. மழையில்லாமல் போனதற்கு, ஆலயம் பழுதாய்க் கிடப்பதும், அக்கிரகாரம் பாழாய்க் கிடப்பதும்தான் காரணம் என்பதை அவ்வூர் ஜமீன்தார் அவர்களுக்குத்தக்க காரணங்களுடன் எடுத்துக்கூறி அவரைக்கொண்டு ரூபாய்5000செலவில் சமீபத்தில் ஆலயத்தைப் பழுது பார்த்து, கும்பாபிஷேகம் நடத்தி, பிராமண போஜனம் செய்து வைத்தார். தேசமெங்கும் அரிஜன ஆலயப்பிரவேசம் நடைபெற்றும் அவ்வூரில் நடைபெறவில்லை. சிவில் உரிமைத் தடை ஒழிப்புச் சட்டம் அமுலிலிருந்தும் அந்தப் பார்ப்பனச் சேரிக்குள் கீரை விற்கும் கிழவிகூட நுழையக் கூடாது. கிணற்றில் மற்றவர் தண்ணீர் எடுக்கக்கூடாது. அவ்வளவுக்கும் அய்யரின் சாமர்த்தியமே காரணம். தன் உயிருள்ளவரை மதத்தையும் சாஸ்திரத்தையும் பாதுகாப்பதென்று கங்கணம் கட்டிக்கொண்டிருந்தார்.

அரசப்பன் கலியாண நாள் நெருங்கியது. காலையில் மேளச்

சத்தமும் கேட்டது. "சார்! வாருங்களேன், கலியாணத்துக்கு" என்று எனது வாத்தியார் நண்பர் அரிகாய்யர் அழைக்கவே, அதைமீறமுடியாமல் அவருடன் சென்றேன். நண்பர் என்னை அக்கிரகாரத்தைக் கழித்து அப்பால் அழைத்துச் சென்றார். "எந்த இடத்தில் சார் கலியாணம்?" என்று கேட்டேன். "இதோ பக்கத்தில் பிரத்தியேகமாய் அமைக்கப்பட்டுள்ள சிங்காரப்பந்தலில்" என்று கூறி அழைத்துச் சென்றார்.

பந்தலை அடைந்தோம். அங்கே கலியாணச் சடங்குகள் முறையாய், மும்முரமாய் நடந்துகொண்டிருந்தன. பெண்களும், ஆண்களும், குழந்தைகளும் பந்தல் நிறையக் கூடியிருந்தனர். மேளவாத்தியங்கள் முழங்கிக்கொண்டிருந்தன. மலர் மாலைகளும் வாசனைப் புகைகளும் பந்தலில் மணத்தையூட்டி நின்றன. வேதியர்கள் வேதமோதினர். இவற்றையெல்லாம் பார்த்துவிட்டு, பெண்ணையும் மாப்பிள்ளையையும் பார்க்கவேண்டுமென்று இயற்கையாக எழும் ஆசையினால் தூண்டப்பட்டு மணவறையை நோக்கினேன். என்ன ஆச்சரியம்! அங்கே பெண்ணையும் காணோம். மாப்பிள்ளையையும் காணோம். அரசப்பனுக்குப் பதிலாகக் குளத்தங்கரை அரசமரமும், வேம்பு அம்மாளுக்குப் பதிலாக வேப்பமரமும் நின்றன. பட்டுவேஷ்டியை அரசமரத்துக்கும், பலவர்ண சேலையை வேப்பமரத்துக்கும் கட்டியிருந்தனர். நான் திகைத்துக் கல்லாய்ச் சமைந்துத் திரும்ப உணர்ச்சி பெறுவதற்குள் கொட்டு முழக்கத்துடன் அய்யர் வேப்பமரத்துக்குத் தாலிகட்ட, கலியாணம் இனிது நிறைவேறியது.

இவ்வளவும் கற்பனையல்ல தோழர்களே, உண்மையில் நடந்தது, திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள ஒரு கிராமத்திலே நடந்த வைபவம் இது. ஊருக்கு மேற்கேயுள்ள குளத்தங்கரையில் பிள்ளையார் கோவிலுக்குப் பக்கத்தில் ஜோடியாய் வளர்ந்துள்ள அரசமரத்தையும் வேப்பமரத்தையும் சுற்றி ஒரு மேடை கட்டிப் பந்தல் அமைத்து, புஷ்பம் அலங்காரம் மேள தாளத்துடன் கலியாணம் நடத்தி வைக்கப்பட்ட செய்தி உண்மை. (பெயர்கள் கற்பனை) கலிகாலத்திலே இதென்ன கேலிக்கூத்து என்கிறீர்களா? அதைப்பற்றிக் கனகய்யருக்கு என்ன கவலை? அவருடைய மதம், சாஸ்திரம் அவருக்குக் கட்டளையிட்டபடி, குல தர்மம் செழிக்க இந்த 'சத்காரியத்தை'ச் செய்து முடித்தார்.

அய்யருக்குக் கல்யாணமாகிப் பத்து வருடங்களாகியும் புத்திர சந்தானம் உண்டாகவில்லையென்ற கவலையால் பலவிதமான முயற்சிகள் செய்து பார்த்தார். நவக்கிரகசாந்தி, சனீஸ்வர பூஜை, இஷ்டதேவதா ஆராதனை முதலியன எல்லாம் செய்து முடித்தார். "கஷ்ட காலத்திலே கஞ்சிக்கில்லையென்று ஏழைகள் கதறிக் கேட்டபோது களஞ்சியத்திலே உள்ள நெல்லை ரூபாய்க்கு 1-படி என்று கை கூசாமல் அளந்தானே, கர்மசண்டாளன், அவனுக்கு எப்படிக் குழந்தை பிறக்கும்" என்று ஊரில் ஏற்பட்ட பழியையும் பாவத்தையும் துடைப்பதற்காக ராமேஸ்வரத்துக்குத் தம்பதி சமேதராய்ப் போய்விட்டு வந்தார். சிவபக்தராயிருந்தும் துவேஷம் பாராட்டக் கூடாதென்று எண்ணி பெருமாள் கோவிலுக்கு அர்ச்சனைக்குக் கொடுத்து ஸ்ரீராமநவமியை 10 நாட்கள் பஜனை, பாராயணம், சுண்டல் பிரசாதங்களுடன் சம்பிரமமாய்க் கொண்டாடினார். கடைசியில் அரசமரத்தை 40 நாள் சுற்றினால் சந்தான விருத்தி யுண்டாகும் என்று கூறிய ஆரிய சாஸ்திரப்படியும் நடக்கத் தீர்மானித்தார்.

அந்த ஊரில் அரசமரமும் வேப்பமரமும் ஜோடியாய் இல்லை. குளத்தங்கரை மரத்துக்குக் கலியாணம் ஆகாமலிருந்தது. கலியாணம் செய்யப்பட்ட மரங்களைச்சுற்றினால்தான் பலனுண்டு என்று சாஸ்திரம் கூறுகிறதாம். ஆகவே குளத்தடி 'அரசப்பனுக்'குக் கலியாண 'யோகம்' அடித்தது.

கலியாணத்துக்கு அய்யர் ஒரு காசும் செலவிடவில்லை. ஞானப்பிரகாசம்பிள்ளையைக் கூப்பிட்டு, 'ஓய், இந்த அரசும், வேம்பும் உமது தகப்பனார் வைத்துப் பயிரிட்டது. நீர் அதற்குக் கலியாணம் செய்து வைக்கவேண்டும். இல்லாவிட்டால் வைத்ததிற்கு புண்யம் இல்லை. குடும்பம் விருத்தியாகாது. வைகாசி மாதம் 20ம் நாள் நல்ல முகூர்த்தம், ஏற்பாடு செய்து விடுவோமே" என்றார். உடனே பிள்ளையவர்களும் இசைந்தார்கள். பிறகு கேட்பானேன். பிள்ளைவாள் செலவிலே, அய்யர்வாள் ஆதரவிலே, மேள தாளத்துடன் கலியாணம் ஜாம் ஜாமென நடந்தேறியது.

கலியாணம் நடந்து முடிந்தவுடன் பிள்ளைவரம் வேண்டி நின்ற அய்யரும் ஆச்சியும் முதலில் அரச மரத்தைச் சுற்றி வந்தார்கள். பின்பு மற்றவர்கள் சுற்றினார்கள்.

* * *

மற்றைய நாடுகளிலே பெண்கள் குதிரை மீதேறிப் பந்தய ஓட்டம் ஓடுகிறார்கள். கப்பல் ஓட்டிக் கடலைக் கடக்கிறார்கள். பந்தய ஆட்டத்திலே பந்தடி மட்டையை லாவகமாய்ச் சுற்றுகிறார்

(16-ம் பக்கம் பார்க்க)

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

பெற்றது. நான் என் தாயாரின் முகத்தைப்பார்த்தேன். தெளிவாக அவள் முகம் அந்த ஒளியிலே தெரிந்தது. அவள் என்னைப் பயங்கரமாகப்பார்த்தாள். மிகவும் சிரமப்பட்டு அவள் வாய்திறந்தாள். மிகவும் கஷ்டப்பட்டுப் பேசினாள்! 'கோமா' இதெல்லாம் ஆபத்தான காரியங்கள்! இந்தத்திருட்டுப்பழி உன்மீது வந்துவிடும்! இது நமக்கு எதற்கு? என் உயிரை உலகிலே நிறுத்த இவைகளால் முடியுமென்ற எண்ணமா? மகனே! அது முடியாதகாரியம். இவைகளை இவற்றின் உரிமையாளர்களிடம் சேர்ப்பித்து விடு! நான் இன்னும் சிறிதுநேரத்தில் இந்த உலகிடம் விடைபெற்றுக் கொள்ளுவேன். கோமளா, உன்னை வளர்த்த உன் தாயின் சடலத்தை உன் தந்தையின் கல்லறையின் வலது பக்கத்திலே புதைத்து ஒரு கல்லறை எழுப்பத்தவறாதே! அதுவே எனக்குப் போதுமானது. கண்ணே, உலகிலே ஜாக்கிரதையாக வாழு! உன் தந்தையை விழுங்கிவிட்ட உலகம் இது!......'என்ற வார்த்தைகள் அவளின் வற்றிய அதரங்களிலிருந்து மெள்ள மெள்ள வெளிக்கிளம்பி என் காதுகளைத் துளைத்து இதயத்தைக் கிள்ளியது மல்லாமல் என் கண்களையும் குத்தி அவைகளிலிருந்து நீரைத்தளும்பி வழியச்செய்தன! அந்தக் கண்ணீர் அவள் ஊண்களிலிருந்து நீரை வெளிவரச் செய்திட்டது! தாய்மை கண்ணீராலே தவழ்ந்து நின்றது! நான் அவள் பாதங்களைப் பிடித்துக் கொண்டு அழ ஆரம்பித்து விட்டேன். அவள், 'கோமளா, எனக்கும் உன் அப்பாவிற்குக் கடைசி நேரத்திலே தந்ததைப்போல ஒரு முத்தம்தா கண்ணே!' என்று கேட்டாள். நான் அவளுக்கு ஒரு அன்பு முத்தம் தந்தேன்! அவளின் அன்பு முகத்திலே என் முகத்தைப் பதிய வைத்துச் சிறிது நேரம் தேம்பித் தேம்பி அழுதேன். 'கண்ணே!' என்றாள். நான் தலை நிமிர்ந்தேன். 'இந்தப்பொருட்கள்யாருடையவை என்று உனக்குத் தெரிகிறதா? தெரிந்தால் அதை அவர்களிடம் இப்பொழுதே சேர்ப்பித்து விடு'' என்றாள். நான் அந்த மூட்டைகளிலிருந்த நகைகளைத்தழுவினேன். அந்த மூட்டையின் அடிப்பாகத்திலே இருந்த பொற்சங்கிலியொன்றைப் பார்த்தேன். அதைப்பார்த்ததும் உடனே அந்தப்பொருட்கள் யாருடையவை என்பதை யறிந்து கொண்டேன். உடனே அந்த மூட்டைகளை முடிந்து கொண்டு என் அன்னையிடம் விடை பெற்றுக் கொண்டு புறப்பட்டேன். அந்தப் பொருட்களை அவைகளின் உடைமையாளர்களிடம் சேர்ப்பித்தேன், அவர்கள் தங்கள் பொருட்களைப் பறிகொடுத்ததை யறியாமல் தூங்கிக் கொண்டிருந்தார்கள். நான் நடந்தவையாவையும் கூறினேன். அவர்கள் என்னை வாயார வாழ்த்தினார்கள்! நான் விடைபெற்றுக் கொண்டு அவசரம் அவசரமாக வீடுதிரும்பினேன்.

"நண்பரே, நான் வீடு திரும்பியதும் நான் கண்ட காட்சி என்னைத்திகைக்க வைத்திட்டது! என் அன்னை மரக்கட்டையைப் போல விரைத்துப்போன உடலினளாய்ப் படுத்துக் கொண்டிருந்தாள். அவள் கால் மாட்டிலே ஒரு பயங்கர மனிதன் உட்கார்ந்து கொண்டிருந்தான். பருத்துக் கருத்த உடல்! விசித்திரமான முறையிலே சீவி முடிக்கப்பெற்ற தலைமயிர்! கருப்பு உடை! குடையிலே நீண்டவாள்!... நான் தைரியத்தை வரவழைத்துக் கொண்டு அவனை முறைத்துப் பார்த்தேன். அது என்னோடு சண்டையிட்டவனல்ல என்பதை நன்றாகத் தெரிந்து கொண்டேன். பின்பு யாராக இருக்கவேண்டும்? இன்னொரு கள்ளனோ?... அவனை முறைத்துப் பார்த்தபடியே என் அன்னையின் படுக்கையை நெருங்கி 'அம்மா, அம்மா!' என்று பல முறை கூப்பிட்டேன். அவள் உடலைத் தொட்டுப்பார்த்தேன். அது சில்லிட்டுப்போயிருந்தது. நண்பரே, என் அன்னையின் மூச்சு நின்று விட்டிருந்தது. என் ஆசைத் தாய் பிணமாகக் கிடந்தாள், என்னால் வேதனையையும் அழுகையையும் அடக்கமுடியவில்லை. அழ ஆரம்பித்தேன். இடையிலே அந்தப்பயங்கர மனிதனைப் பார்த்துக் கொண்டேன். அவன் ஆடாமல் அசையாமல் அப்படியே உட்கார்ந்து கொண்டிருந்தான். 'ஏய்' நீயார்?' என்றேன். அவன் என்னைத் திரும்பப் பார்த்தான். அவ்வளவுதான் வேறேதும் பேசவில்லை நான் என் அன்னையின் உடலின்மீது வீழ்ந்து அழ ஆரம்பித்தேன். என் முதுகிலே அந்தப் பயங்கர மனிதனின் கைகள் இலேசாகத் தட்டின. நான் தலைநிமிர்ந்தேன், 'தம்பி!' என்ற அன்பு மொழிகேட்டு. அந்த வார்த்தையிலே தழ்ந்திட்ட அன்பும் அருளும் என் இதயத்தைத் தொட்டன. அந்த மனிதனின் முகத்தைப் பார்த்தேன். நண்பரே, நான் மிகுந்த வியப்படைந்தேன். ஆம். அந்த மனிதனின் கண்களிலே நீர்தளும்பி நின்றது. 'தம்பி அழாதே! உன் அம்மா அதைத்தான் கடைசியாக விரும்பினாள். தம்பி, இப்படிவா. உன்னிடம் நான் கூறவேண்டியவை சில உள்ளன' என்று என் கையை அன்பாகப் பிடித்துத் தன் அருகிலே உட்கார வைத்துக்கொண்டு அந்த மனிதன் தொடர்ந்து பேசினான். (தொடரும்)


## போர்வாள்

### சந்தா விவரம்

| | | |
|---|---|---|
| ஓராண்டு | ரூ. | 6—8—0 |
| 6 மாதம் | ரூ. | 3—4—0 |

போர்வாள் அலுவலகம்
131, பிராட்வே, சென்னை 1.

## அறிவுக்கு விருந்து!

### அரியதோர் வாய்ப்பு!!

| | | |
|---|---|---|
| வாழ்க்கையில் வெற்றி | 2 | 8 |
| முன்னேறுவது எப்படி | 2 | 8 |
| வாழ்வைத் துவக்கு | 2 | 8 |
| முஸ்லிம் சமுதாய சிற்பிகள் | 2 | 0 |
| இஸ்லாமிய திலகங்கள் | 2 | 12 |
| கவலைப்படாதே | 2 | 8 |

### தணலன் தீட்டியவை

| | | |
|---|---|---|
| கானகத்திலே காதல் | 1 | 12 |
| செல்வ குமாரி | 1 | 0 |
| அழகு நிலா | 1 | 0 |
| அந்த இரவு | 0 | 8 |
| அன்னியன் | 0 | 8 |
| நடிகன் | 0 | 8 |
| வாத்தியாரம்மா | 0 | 4 |
| ஆள்வோர் யார் | 0 | 4 |
| தாய் | 0 | 4 |
| வாழும் உரிமை | 0 | 8 |
| சாயபாஜீ (ஏ.கே. வேலன்) | 1 | 0 |
| கைதி ,, | 1 | 4 |
| இலவுகாத்த கிளி (கார்க்கி) | 1 | 0 |

பகுத்தறிவுப் பாசறை
131, பிராட்வே சென்னை 1.

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

எனக்கு வேண்டிய உதவியைச் சற்று விரைவாகச் செய்து தாருங்கள்; தங்கள் சிரமத்திற்கு இனாமாக இதை வைத்துக்கொள்ளுங்கள்" என்று கொஞ்சம் பணம் கொடுத்தால், குமாஸ்தா என்ன நினைப்பான். ஐயோ! இனாம் (இலஞ்சம்) வாங்குவது குற்றமாயிற்றே. மீறிவாங்கினாலோ சிறைத்தண்டனை. வேலைக்கும் ஆபத்து. அரசாங்க ஊதியமோ காணவில்லை. ஆபத்து எனினும் என் செய்வது? மனைவியின் நோய்தீர, மகன் பரீட்சைக்குச் செல்ல கடன் தொலைய, மழலைமொழி பேசும் குழந்தைகள் எழிலுடன் வாழவாவது இப்பணம் உதவட்டும்! நாம் சிறையில் வாடினாலாவது பரவாயில்லை. மக்களாவது மகிழ்ச்சியுடன் வாழட்டும் என்ற எண்ணம் உண்டாகிறது. சிக்கலான பிரச்னைதானே;

ஆனால் சில நாட்களில் கூண்டில் நிறுத்தப்படுகிறான், எப்படி? குற்றவாளியாக ஆனால் இங்கே உண்மையான குற்றவாளி யார் தெரியுமா?

நாட்டுமக்களைப் பஞ்சத்திலிருந்து காப்பாற்ற வேண்டுமென்ற நல்லெண்ணத்துடனேயே உணவுதானியமாகிய நெல் முதலியவைகளை பதுக்கி வைத்திருப்போருக்கும் கள்ளமார்க்கெட்டில் விற்போருக்கும் போனஸ், இனாம் என்ற வார்த்தைகளை உச்சரித்து உணவுதானியங்களை சேகரிக்கிறது அரசாங்கம். ஆனால்வீட்டுமக்களைக்காப்பாற்ற வாங்கிய இனாம், இலஞ்சம் என்றுமாறி சிறையில் தள்ளுகிறது ஏழை குமாஸ்தாவை. நாங்கள் அரசியல் பற்றிப் பேசக்கூடாது, போதிய விடுமுறை வசதி கிடையாது, எந்த ஆபீசை எடுத்துக்கொண்டாலும் ஒரே வைதிகர் மயம், பகுத்தறிவு என்ற வார்த்தையை உச்சரித்தாலே பார்ப்பனத்துரோகி என்றும், புராணம் பொய்மையுடைத்து என்றாலே நாத்திகன் என்றும் ஆரியத் தோழர்களால் ஆபீசர்களுக்கு அறிவிக்கப்பட்டு எங்கள் மீது நடவடிக்கை எடுத்துக் கொள்கிறார்கள்.

ஓய்வு கிடையாது என்று கூறி விட்டு, எப்படி இதை எழுத முடிந்தது என்று கேட்கிறீர்களா? சம்பளமில்லாமல் ஒரு நாள் லீவு எடுத்தேன். அப்பொழுது எழுதினேன்!

---

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

இதுதான், ஆகவே ஒவ்வொரு நாட்டுத் தொழிற்சங்கமும் வேலை நிறுத்தம் வெற்றி பெற உதவுவதாக வாக்களித்தன. சரியாக 1926-ம் ஆண்டு மே மாதம் நான்காம் நாள் வேலை நிறுத்தம் ஆரம்பமாயிற்று. உடனே ஆம்ஸ்டர்டாம் பெடரேஷன் எல்லா தேசத் தொழிற் சங்கங்களுக்கும் தந்தியடித்து பிரிட்டிஷ் தொழிலாளருக்கு உதவி செய்யும்படிக் கூறினர். அதன்படி இங்கிலாந்துக்கு வந்து கொண்டிருந்த கப்பல்கள் ஆங்காங்கே நிறுத்தப்பட்டன. ஐரோப்பிய தேசங்கள் பலவற்றில் அனுதாப வேலை நிறுத்தங்கள் நடந்தன.

தொழிலாளர் வரலாற்றில், இதுவரை இந்த மாதிரி நடந்தேயில்லை. வேலை நிறுத்தம் ஆரம்பித்த ஒரு வாரத்திற்குள், பல தொழிற் சங்கங்களின் சார்பாக, வாழ்த்துச் செய்திகளும் உதவி நிதியும் வந்து குவிந்து கொண்டிருந்தன. ஆங்கில நாட்டின் ரயில், ஆலை, தோல் மற்ற எல்லாத் தொழிலாளரும் உணர்ச்சியுடன் வேலை நிறுத்தத்தில் கலந்துகொண்டனர். இந்த சமயத்தில் கம்யூனிஸ்ட் பெடரேஷன் நடந்துகொண்டதுதான் போற்றத்தக்கது. பிரிட்டிஷ் தொழிற்சங்கம் "ஆம்ஸ்டர்டாமின்" பகுதி என்ற போதிலும் தொழிலாளரின் பொது நன்மையை உணர்ந்து கம்யூனிஸ்ட் பெடரேஷன் தன்னாலான உதவியைச் செய்தது, ஆனால் எல்லோருடைய உழைப்பும் விழலுக்கிறைத்த நீராகவே மாறிற்று! வேலை நிறுத்தம் ஆரம்பித்த ஒரு வாரத்திற்கெல்லாம், திடீரென்று பிரிட்டிஷ் தொழிலாளர் தலைவர்கள் வேலை நிறுத்தத்தை வாபஸ் வாங்கினர். இதனால் ஐரோப்பிய தொழில் உலகில் பெரிய நெருக்கடி உண்டாயிற்று. ஆம்ஸ்டர்டாம் பெடரேஷன் பெரியதொரு ஏமாற்றத்தை யடைந்தது.

1930-31-ல் உலக மார்க்கெட் நிலை கெட்டது. பெரும் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டது. பாங்குகள் முறிந்தன. ஆலைகள் மூடப்பட்டன. தொழிலாளர்கள் வேலையின்றியும், குறைந்த கூலி வாங்கிக் கொண்டும் தவித்தனர். அந்த வருடங்கள் உலகப் பொருளாதாரத்தை தலைகீழாக்கின.

இதைத் தொடர்ந்தாற்போல் 1933-ல் ஜெர்மனியில் நாஜிசம் ஆட்சிப்பீடத்திலமர்ந்தது. அதற்குப் பிறகு உலகம் மறுபடியும் யுத்த பீதியில் ஆழ்ந்தது. தொழிலாளர் ஒரு வசதியுமில்லாமல் தேசியம் சாவதேசியம் இரண்டுக்குமிடையில் அகப்பட்டுக்கொண்டு தவித்தனர். கடைசியாக 1939-யுத்தம் வந்தது. யுத்தத்தின்போது கம்யூனிஸ்டு அகிலத்திலிருந்த மூன்றாவது சாவதேசியச் சங்கம் கலைக்கப்பட்டது. இதற்குப் பிறகு 13 ஆண்டுகள் ஓடிவிட்டன. இந்த 8 ஆண்டுகள் தொழிலாளிகளுக்குக் கொடுத்த தொல்லை அளவில்லாதது. நேரிடையாகத் தொழிலாளர்தாம் போரின் பாரங்களைத் தாங்கவேண்டியிருந்தது.

நூறு ஆண்டுகளுக்கு முன்னால், தொழிலாளரின் ஒப்பற்ற தலைவன் மார்க்ஸ் கூறியபடி, இன்றையதினம் உலகத்தில் மிஞ்சியிருப்பது முதலாளி தொழிலாளி என்ற இரண்டே இனம்தான். முதலாளி வர்க்கத்தை வளர விட்டு, மறுபடியும் போர் உண்டாகும் வழியை இனியும் விட்டு வைப்பது தவறு. பாட்டாளி மக்கள் ஒன்று கூட வேண்டும். முதலாளி வர்க்கம் அடியோடு அழிக்கப்படவேண்டும். இதைச் செய்ய சர்வதேசிய அடிப்படையில் வலுவான முன்னணி தேவை.

"உலகத் தொழிலாளர்களே, ஒன்றுபடுங்கள்"

# போர்வாள்

திராவிடர் வார இதழ்

சென்னை 23—2—52 சனிக்கிழமை


# கராச்சியில் டில்லி!

தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் ஆகிய இந்த மொழிகளே தென்னிந்திய மக்களின் தாய்மொழிகள்.

இந்த நான்கு மொழிகளினிடையே வளர்ந்து, இவற்றினிடையேயே வாழ்பவர்கள்தான் தென்னிந்தியர்கள்.

தென்னிந்திய மக்களின் கலாசாரம், வரலாறு, புகழ், சிறப்பு, செல்வாக்கு யாவும் இந்த மொழிகளிலேதான் புதைந்து கிடக்கின்றன.

இந்த மொழிகளின் வாழ்வும் தாழ்வுமே தென்னிந்தியரின் வாழ்வும் தாழ்வும் ஆகும்.

தென்னிந்திய மக்களுக்கு உணர்ச்சியை ஊட்டி, உற்சாகத்தை ஊட்டி, உயிர்ப்பாற்றலை ஊட்டி, ஒப்பற்ற எழுச்சியை, இன்பத்தை ஊட்டி, அவர்களைத் தலை நிமிர்ந்து நடக்கச்செய்யும் தனிப் பெருமை படைத்த நான்கு அரிய சக்திகள் இந்த நான்கு அழகிய மொழிகள்தான்.

எனவே, தென் இந்திய மக்களுக்குத் தேசிய மொழிகளாகவோ அரசாங்க மொழிகளாகவோ அமையும் தகுதி இந்த நான்கு மொழிகளுக்கு உண்டு.

இந்தி மொழி, வட இந்தியரின் தனி உடைமை. அது தென் இந்தியரின் தாய்மொழி அன்று.

ஆகவே, தென் இந்தியாவுக்குத் தேசிய மொழியாகவோ அரசாங்க மொழியாகவோ அமையும் தகுதி இந்தி மொழிக்குத் துளியளவும் கிடையாது.

என்றாலும், டில்லி தன்னுடைய கரத்திலே அகில இந்தியாவின் ஆட்சி இயந்திரம் சிக்கிக்கொண்டிருக்கிற ஒரே காரணத்தால், தன்னுடைய இந்தி மொழியை, அந்த மொழியைத் தாய் மொழியாகக் கொள்ளாத தென்னிந்தியருக்கும் தேசிய மொழியாகப் பிரகடனம் செய்துவிட்டது.

வட இந்தியா, தன்னுடைய மொழியைத் தென்னிந்தியர் மீது வலுக்கட்டாயமாகத் திணித்திருக்கிறது.

வட இந்தியாவின் இந்தப் போக்குக்கு மொழித்துறை ஏகாதிபத்தியம் என்று பெயர்.

இந்தப் போக்கு, எள்ளி நகையாடப்பட வேண்டியது; கண்டித்து ஒழிக்கப்பட வேண்டியது.

இந்த அநாகரிகப் போக்கு டில்லி தேவதைகளுக்கு மட்டும் தான் சொந்தம் என்று நாம் இதுவரை எண்ணிக்கொண்டிருந்தோம்.

இல்லை—அது எனக்கும் கூட சொந்தம்தான் என்று புன்னகை பூத்த முகத்துடனே பூரிப்பு மொழி பேசுகிறது பாகிஸ்தான் அதிகார வர்க்கம்.

வேறு ஒரு மொழியைத் தாய் மொழியாகக் கொண்டவர்கள் மீது தங்களுடைய மொழியைத் தேசிய மொழியாகவும் அரசாங்க மொழியாகவும் பலவந்தமாகத் திணிக்கிற பழி மிகு செயலை, இந்தியா மட்டுமல்ல, பாகிஸ்தானும் புரியத் தொடங்கியிருக்கிறது. டில்லி அதிகார வர்க்கமும் மொழித்துறை ஏகாதிபத்தியத்தை அமல் நடத்தத் தொடங்கியிருக்கிறது.

கிழக்கு பாகிஸ்தானில் வாழும் மக்களில் மிகப் பெரும்பாலோருடைய தாய்மொழி வங்காளி. மிக மிகச் சிறுபான்மை மக்களே, அங்கு, உருது பேசுவோர்.

ஆகவே, உருதுமொழி அல்ல—வங்காள மொழியே அங்கே தேசிய மொழியாகவும் அரசாங்க மொழியாகவும் அரியணையில் அமர்த்தப்பட வேண்டும்.

அதுதான் நியாயம். அதுதான் முறை. அதுதான் ஒழுங்கு.

அதுதான் ஜனநாயகப் பாதை.

ஆனால் அந்தப் பாதை வழிசெல்லவில்லை பாகிஸ்தான் அதிகார வர்க்கம். டில்லிப் பாதைவழி நடக்கத் தொடங்கி யிருக்கிறது. வங்காள மக்கள்மீது அவர்களுக்குத் தாய் மொழி அல்லாத உருதுவைத் தேசிய மொழியாகவும் அரசாங்க மொழியாகவும் திணித்திருக்கிறது.

கராச்சியின் இந்தப் போக்கு, பாகிஸ்தான் அதிகார வர்க்கத்தின் இந்த நடவடிக்கை, கிழக்கு வங்காளிகளின் உள்ளத்தில் பெரியதோர் கொந்தளிப்பை உண்டாக்கி யிருக்கிறது.

விட்டுவைக்க மாட்டோம் இந்த விபரீதப் போக்கை என்று கிழக்கு வங்காளிகள் வீர முழக்கமிடத் தொடங்கி யிருக்கிறார்கள்.

கிழக்கு வங்காளத்தில் உள்ள சகல கட்சியினரும் இதற்காக ஒன்றுகூடி மொழிப்போர் முன்னணி அமைத்திருக்கிறார்கள்.

இந்த முன்னணியைக் கலைக்க, கராச்சி அதிகாரவர்க்கம், அடக்குமுறைப் பாணங்களை ஏவுகிறது. துப்பாக்கிக் குண்டுகளைப் பறக்க விடுகிறது. போலீஸ் தடிகளைச் சுழற்றிக் காட்டுகிறது.

"உருதுவே தெரியாத கிழக்கு வங்காளத்திற்கு அரசாங்கமொழி உருதுவா? கூடாது! ஆகாது!" என்று போர்ப் பரணி பாடிய வண்ணம் ஆயிரக்கணக்கான மாணவர்கள் 21-2-52 அன்று கிழக்கு வங்கத் தலைநகரான டக்காவில் ஊர்வலமாகச் சென்றிருக்கிறார்கள்.

அந்த ஊர்வலத்தைத் தடியால் அடித்துக் கலைத்திருக்கிறது அதிகார வர்க்கம்.

துப்பாக்கிப் பிரயோகமும் செய்திருக்கிறது.

கண்ணீர்க் குண்டுகளையும் வீசியிருக்கிறது.

150 பேர், துப்பாக்கிக் காயங்களுடன் ஆஸ்பத்திரிகளில் சேர்க்கப்பட்டனர்.

அவர்களில் பதினொரு பேர் இறந்து விட்டனர்.

ஒருவர், துப்பாக்கிப் பிரயோகம் நடந்தபோதே இறந்துவிட்டார்.

ஊரடங்கு சட்டம் — வீதிகளில் இராணுவ பவனி—144 தடை உத்தரவு—துப்பாக்கி வேட்டு — கைது செய்யும் படலம்-எதையும் பாக்கி வைக்கவில்லை ஆட்சியாளர்கள்.

அந்நிய மொழியை மக்கள்மீது திணிக்கும் ஏகாதிபத்யப் போக்கில் மட்டுமல்ல, அப்படித் திணிக்கப்பட்ட மொழியை எதிர்த்து அறப்போர் புரியும் மக்களை அடக்கி ஒடுக்குவதிலும், டில்லிப் பாதையையே பரிபூரணமாகப் பின்பற்றியிருக்கிறது கராச்சி.

கராச்சியில், டில்லி, குடியேறியிருக்கிறது.

பாகிஸ்தான் அதிகார வர்க்கத்திற்கு டில்லி அதிகார வர்க்கத்தின் நோக்கும் போக்கும் படிந்துவிட்டிருக்கிறது.

ஆகவேதான் அது, மொழிப்போர் புரியும் மக்கள்மீது கொடிய அடக்குமுறையைக் கட்டவிழ்த்து விட்டிருக்கிறது.

இந்த அடக்குமுறை அக்கிரமத்தை நல்லறிவாளர்கள்—அனைவரும் நிச்சயம் கண்டிக்கத்தான் செய்வார்கள்.

உருதுவே தெரியாத வங்காளத்திற்கு உருதுவைத் தேசிய மொழியாக்கும் ஏகாதிபத்ய ஏற்பாட்டை யாரும் ஒப்புக் கொள்ளத்தான் மாட்டார்கள்.

ஜனநாயகக் கோட்பாட்டில் பாகிஸ்தான் ஆட்சியாளர்களுக்கு நம்பிக்கையும் பற்றுதலும் இருக்குமானால், இந்த அடக்குமுறை அக்கிரமத்திற்கு உடனே அவர்கள் முற்றுப்புள்ளி வைத்தாகவேண்டும்.

வங்கநாட்டில் உருது மொழியைத் தேசிய மொழியாகவும் அரசாங்க மொழியாகவும் அமைத்துள்ள ஏற்பாட்டை ரத்து செய்துவிட்டு, வங்கமொழியையே வங்க நாட்டின் தேசிய-அரசாங்க மொழிகளாகப் பிரகடனம் செய்யவேண்டும். செய்வார்களா?

---

(15-ம் பக்கத் தொடர்ச்சி)

மகா யுத்தம் (1914–18) முடியும் வரை, தொழிற் சங்கங்களின் நடவடிக்கை ஒத்தி வைக்கப்பட்டது. சொல்ல முடியாத துன்பங்களை உண்டாக்கி விட்டு மறைந்தது மகா யுத்தம். மகா யுத்தத்தின் முடிவில், ரஷ்யத் தொழிலாளி வர்க்கம், அரசாங்கத்தைக் கைப்பற்றியது. ரஷ்யத் தொழிலாளர்களின் வெற்றி, யுத்தத்திற்குப் பின்னால் ஐரோப்பாவில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி. ஜெர்மனி. ஆஸ்டியா, ஹங்கேரி ஆகியவைகளில் ஏற்பட்ட குடியரசு அரசாங்கங்கள் ரஷ்யத் தொழிலாளருக்குப், பக்கபலமாக அமைந்தன. ரஷ்யத் தொழிலாளிகள் 'லெனின்' தலைமையின் கீழ் ஒன்று பட்டுநின்றார்கள். தாங்கள் அடைந்த வெற்றி தங்கள் சகோதர தொழிலாளிகளுக்கும் கிடைக்க வேண்டுமென்று, தீவிரமாக வேலை செய்தனர். அதன் பலனாகத்தான், 1919-ல் மாஸ்கோவில் மூன்றாவது சர்வ தேசிய சங்கத்தைக் கம்யூனிஸ்டுகள் கூட்டினார்கள். இதற்கு மிதவாதத் தலைவர்கள் போகவில்லை. இருந்தாலும் காங்கிரஸ் உற்சாகத்துடன் நடை பெற்றது. மூன்றாவது சர்வ தேசியத்தை ஆரம்பித்த கம்யூனிஸ்டுகள், தங்களை "மார்க்ஸ் ஆரம்பித்த காரியத்தை முடிக்கும் தொண்டர்கள்" என்று கூறிக்கொண்டார்கள். ஆகவே இந்தச் சங்கத்தில் எல்லோரும், அங்கத்தினராக முடியவில்லை. மிதவாதிகளும் சோஷியலிஸ்டுகளும், தங்களுக்கென்று, தனிப்பட்ட ஸ்தாபனத்தை உண்டாக்கினார்கள். 1919 ஆம்ஸ்டர் டாமில் கூடி. தொழிற் சங்கங்களின் சர்வ தேசிய பெடரேஷன் ஆரம்பித்தார்கள். இது முதல் ஆம்ஸ்டா டாம் பெடரேஷனுக்கும் கம்யூனிஸ்டுகள் அதிகமாயிருந்த மூன்றாவது சர்வ தேசிய சங்கத்திற்கும் போராட்டம் அதிகமாகியது. மகா யுத்தத்திற்குப் பிறகு ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியைச் சரியான வழியில் உபயோகப் படுத்துவதை ஆம்ஸ்டர்டாம் பெடரேஷன் தடுக்கிறது என்று கம்யூனிஸ்டுகள் குறை கூறினர். இந்த வேற்றுமை வளர வளர, ஐரோப்பிய தொழிலாளர் உலகம் இரண்டாகப் பிரிந்தது. 1921-ல்கூடிய ஆம்ஸ்டர்டாம் பெடரேஷனின் காரியகமிட்டி, கம்யூனிஸ்டு தொழிற்சங்கங்களைச் சேர்ந்தவர்கள் சர்வ தேசிய தொழிற் சங்க பெடரேஷனில் அங்கத்தினராவதைத் தடை செய்தது. இதற்குப் பிறகு ஆம்ஸ்டர்டாம் பெடரேஷனும் கம்யூனிஸ்டு பெடரேஷனும் தங்கள் தங்கள் பாதையிலேயே சென்றன.

தொழிலாளர்களின் அன்றாட தேவைகளைப்பூர்த்திசெய்ய உழைப்பதும், படிப்படியாகச் சீர்திருத்தங்கள் செய்து பார்லிமெண்டரி முறைப்படி அரசியலதிகாரத்தை கைப்பற்றுவதும் ஆம்ஸ்டர்டாம் பெடரேஷன் கொண்டிருந்தகொள்கை. தொழிலாளர்களின் உரிமையைப் பாதுகாக்க, அரசியல், தொழிலாளரின் கைக்கு வரவேண்டும் என்று தீர்மானமாகக் கம்யூனிஸ்டுகள் கூறினர். இந்த அடிப்படைக் கொள்கைவேற்றுமையின் காரணமாக ஆம்ஸ்டர்டாம் பெடரேஷனுக்கும் கம்யூனிஸ்டு பெடரேஷனுக்கும் விரோத மனப்பான்மை வளர்ந்துகொண்டே போய்க்கொண்டிருந்தது. இதற்கிடையில் 1926ல் இங்கிலாந்து தேசத்தில் புதிய தொழிற் பிரச்னை உண்டாகியது. அங்குள்ள சுரங்கத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்ய முடிவு செய்தனர். இந்த வேலை நிறுத்தத்தை ஆம்ஸ்டர்டாம் பெடரேஷன் ஆதரித்தது. அதை யொட்டி வேலை நிறுத்தம் ஆரம்பித்தவுடன், அவர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்ய பெடரேஷன் முன்னுக்கு வந்தது. தொழிலாளர் யூனியன்கள் ஏற்பட்ட பிறகு சர்வ தேசிய ரீதியில் கவனத்தை உண்டாக்கிய முதல் வேலை நிறுத்தம்

(7-ம் பக்கம் பார்க்க)

---

## ஏ. வி. பி. ஆசைத்தம்பி

## முகவரி மாற்றம்

தோழர் ஆசைத்தம்பி தனக்குக் கடிதம் எழுதுவோர் அனைவரும் இனி, ஏ.வி.பி. ஆசைத்தம்பி, ஆசிரியர், 'தனியரசு' விருதுநகர் என்ற முகவரிக்கே எழுதும்படி கேட்டுக் கொள்கிறார்.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஒரே உரிமையில் பிறந்தாலும் ஒருவன் பொருளற்றவனாகவும், மற்றொருவன் பொருளுடையவனாகவும் கருதப்படுவானேன்? இந்த நிலைகள் ஏன் இன்னும் காப்பாற்றப்பட்டு வருகின்றன வென்றால், பாட்டாளி உலகம் முழுவதும் கேள்விக்குறியாக இன்னும் சரியானபடி மாறாததுதான்!

பாட்டாளியைப் பாட்டாளியாகவும், பணக்காரனைப் பணக்காரனாகவும் விட்டுவைப்பதற்குக் காரணங்களாக உள்ளவை சாஸ்திர, சம்பிரதாய, உபநிஷத, வேத, கடவுள், கடவுளவதார கடவுளருள் பெற்றோர் ஆகியோரால் கட்டளையிடப்பட்ட கருத்துக்களாகச் சொல்லப்படுபவையேயாகும். அவைகளின் மேல் எழுதப்பட்ட சடங்குகளும், சட்டதிட்டங்களும்தாம் பேதமுற்ற நிலையைக் காப்பாற்றி வருகின்றன. அந்தச் சட்ட திட்ட சம்பிரதாயங்களின்மீது நின்று ஆட்சி நடைபெறுவதாலும், அப்படிப்பட்ட ஆட்சி, நடைபெறுவதற்கான முறையிலேயே, பணக்காரர்கள் தங்களுக்குக் கிடைத்த வசதிக் கருவிகளைப் பயன்படுத்தி வருவதாலுமே பணக்காரர்கள்-பாட்டாளிகள், இன்றும் நின்று நிலவுகின்றனர்.

உலகம் பொது; அதில் தோன்றுகின்ற அனைத்துயிரும் தங்களுக்குத் தேவையானவற்றைப் பெற்று, நுகர்ந்து, வாழ்ந்து, மடிகின்றன; மற்ற பறவை, விலங்கினங்களைப் போலவே மக்களினமும் தோன்றுகின்றன. அவைகளைப் போலவே மக்களினமும் தனக்குத் தேவையானவற்றைப் பெற்று வாழ முடியும்! ஆனால் அதைத்தான் நடைமுறையில் காண முடியவில்லை. மக்களினம் தம்மைத்தாமே ஏமாற்றிக் கொண்டு வாழ்கிறது. 'கையடியும், வாயடியும் கொண்டபேர்கள்' ஏமாற்றுக்காராகளாகவும், 'கண்மூடி மக்கள்' ஏமாறும் மக்களாகவும் வாழ ஆரம்பித்ததால், உரிமை, கூடக் குறைய பங்கு போடப்படுகிறது.

காலாயிரம் ஏக்கர் நிலத்திற்கு உரிமையுடையவனாகக் கருதப்படும் ஒருவனுக்கு, ஒரு ஆண் மகன் பிறந்துவிட்ட காரணத்தினாலேயே அந்த மகன் அந்த காலாயிரம் ஏக்கர் நிலத்திற்கும் சொந்தமுடையவனாகிறான். இந்த உரிமையை அந்த மகனுக்கு அளிப்பதற்குக் காரணமாகவிருப்பது பிறப்பின் மேல் உரிமை ஏற்றப்பட்டிருப்பதே! ஏற்றப்படக்கூடாது; பகுத்தறிவுக்கு ஒத்ததல்ல; பண்பிற்கு ஏற்றதல்ல; இயற்கை நீதிக்கு அடுத்ததல்ல; என்றாலும் ஏற்றப்பட்டிருக்கிறது. பிறப்பின் காரணமாகக் கிடைக்கும் அந்தச் சொத்துரிமையோடு, தன் 'திறமை'யால் தேவைக்கு அதிகமான பொருளைச் சேர்ப்பதற்கான உரிமையைப் பழைய சம்பிரதாயத்தின்மீது கட்டப்பட்ட அரசியல், பொருளாதார, சமுதாய சட்டதிட்டங்கள் அளிக்கின்றன. பாட்டாளி வீட்டில் பிறக்கும் ஒருவன் அந்தப் பாட்டாளிக்குச் சொந்தமெனக் கருதப்பட்டவைகளுக்குத்தான் உரிமையுடையவன். அவனும் அவைகளைக் கொண்டு தான் தன் உழைப்பால் வாழ்க்கையோடு போராடி வெற்றிபெற வேண்டும். ஆகவேதான், சொத்துரிமையைப்பிறப்பின்மீதுஏற்றி, அதன் காரணமாகத் தேவைக்கு மீறின சொத்து ஒருவனிடம் போய்ச் சேரவும், மற்றொருவனிடம் ஒன்றும் சேராமல் போகவும் ஆன நிலையை, அடியோடு—வேரோடும் வேரடி மண்ணோடும் ஒழித்து, பிறப்பின் மீது சொத்துரிமையை ஏற்றுகின்ற கயமைத் தன்மையைச் சட்டதிட்ட ஆட்சிமுறையிலே அழித்தொழிக்க வேண்டும். அந்த மாற்றத்தைச் செய்ய இன்றைய பாட்டாளி உலகம் திரண்டெழ வேண்டும்!

அவனவன் தேவையை அவனவனே தேடிக்கொண்டு வாழ வேண்டும் என்றிருந்த காட்டுமிராண்டி வாழ்க்கையில் சொத்து பொதுவாகத்தான் கருதப்பட்டு வந்தது. தேவையானவற்றைமட்டும் அவ்வப்போது பெற்றுக்கொண்டு, தனக்கும் தன்னுடைய பிற்காலச் சந்ததிக்கும் என்றும் பயன்படட்டும் என்று தேவைக்கு மீறின அளவுக்குச் சொத்தைச் சேர்த்து வைத்துக் கொள்ளாமல் வாழ்ந்த நிலை காட்டுமிராண்டி நிலையாக இருந்திருக்கிறது. அதிலிருந்து நாகரிக உலகிற்கு ஓடிவந்த மனிதன், காட்டுமிராண்டி வாழ்க்கையில் தன்னைப் பொறுத்துக் கொண்ட முறையை, சற்று ஒழுங்குபட்ட, பண்பட்ட முறையில் மக்கட் சமுதாயம் முழுதுக்கும் கொள்ளமுற்பட்டிருந்தால், சக்திக்கேற்ற உழைப்பினைச் செய்து தேவைக்கேற்ற வசதியினைப் பெறுவது என்ற உயரிய நிலையில, சமுதாயம் அறிவுத்துறையில் முன்னேறிக் கொண்டிருக்க வழியேற்பட்டிருக்கும். இயற்கையின் நியதியைக் கெடுத்த சுயநலவாதிகளால் சட்டங்கள் இயற்றப்பட்டு சமுதாயத்தைத் தங்கள் விருப்பப்படி மாற்றியமைத்துக் கட்டுப்படுத்திவைக்க முடியும் என்ற நிலையை மாற்றி, பொது நலனுக்கேற்ற சட்டதிட்டங்களை வகுத்து, சமத்துவப் பொதுக் கட்டுப்பாட்டை நிலவச் செய்ய முடியும், என்ற உறுதிப்பாடு, உழைப்பாளிகளுக்கு என்று தோன்றுகிறதோ, அன்றுதான் பாட்டாளி உலக

பழமைக்கு, அபாயக் குறியாக மாற முடியும். அப்படி மாறினால்தான், இன்பபுரியை அடைவதற்கான வழியை வகுக்கமுடியும். பாட்டாளி தன்னறிவிலும், தன்னாற்றலிலும் நம்பிக்கை வைத்துச் செயலாற்ற முற்படும் போதுதான், பொருளாதார பேதம் ஒழியக்கூடும். அந்த நம்பிக்கையை, அவர்களுக்கு ஊட்டுவதற்கு, இளைஞர்கள் பாடுபட வேண்டும். ஆயிரங்கால நச்சுமரத்தின் ஆணிவேரைக் கெல்லி எறியும் பெரும்பணியில், ஈடுபட வேண்டியவராகிறார்கள் இளைஞர்கள்!

உலகிலுள்ள மக்களனைவர்க்கும் தேவையான அளவுக்கு உணவைக் கொடுக்கப் போதுமான அளவு விளைநிலமோ, விலங்கினமோ, பழமுதிர்சோலையோ, கனிகுலுங்கும் காடுகளோ இல்லை என்று கூறிவிட முடியுமா? இருந்தும் பெற முடியவில்லை! பெறமுடியாதபடி மனிதனாலேயே முட்டுக்கட்டைகள் போடப்பட்டிருக்கின்றன. மக்களுக்குப் போதுமான உடைகளைத் தயாரிக்க ஏற்ற அளவு தோலின் வகைகளோ, கம்பளமோ, பருத்தியோ, பட்டோ, ரப்பரோ இல்லையென்று சொல்லிவிட முடியுமா? இருக்கிறது! ஆனால் ஒவ்வொருவருக்கும் கிடைக்கும்படிச் செய்யப்படவில்லை. மக்கள் குடியிருப்பதற்கான இருக்கைகளைச் செய்து கொள்ள வேண்டிய அளவு மரமோ, கல்லோ, மண்ணோ இல்லையென்று மொழிந்து விட முடியுமா? இருக்கின்றன! எல்லோரும் பெறுமாறு செய்யப்படவில்லை. இந்த செய்யக்கூடிய—ஆனால் செய்யப்படாத செயல்களைச் செய்ய, பொதுநலத்திற்கான அறிவைப் பயன்படுத்தும் மக்கள் மூண்டெழ வேண்டும்!

உலகில் பெரும் பகுதி மக்களாக வாழும் பாட்டாளிகள், வறுமையில் உழல இல்லாமை காரணமாகவில்லை, அதிகம் இருப்பதே காரணமாகிறது. பொருள் ஒரு சிலரிடத்தில் பயன்படாத அளவுக்கு முடங்கிக்கிடக்கிறது; அதனால் ஆயிரக் கணக்கானவர்கள் பயன்படுத்த வேண்டிய அளவுக்குக் கிடைக்கப் பெறாமல் வயிறு ஒட்டி மடிகிறார்கள். இதனால் மேட்டுக் குடியினரும், காட்டுக் குடியினரும் இருவேறு பிரிவினராக வாழவேண்டியவராகிறார்கள். பிறப்பில் பேதமில்லை; பேதமிருக்கக்கூடாது; என்னும் போது வாழ்விலும் பேதம் தலைநீட்டக் கூடாது. பேதம் தலைநீட்டக் கூடாது என்றால் மேட்டுக்குடி நிலையும், காட்டுவாழ்க்கை நிலையும் மாறி, மேடும் பள்ளமும் சமத்தரையாக ஆக வேண்டும்.

நாம் வாழும் உலகம் உழைப்பாளரின் உழைப்பால் உருவாகியதாகும். உலகினை விலைகூற வேண்டுமானால், ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாகத் தொழில் புரிந்த பாட்டாளிகளின் மொத்த உழைப்பிற்கு விலை கூறுவதாகப் பொருள். நீரோடைநிலஞ்செழிக்க நெடுமரங்கள் நிறைந்து பெருங்காடாக்க, பெருவிலங்கு நேரோடு வாழ்ந்திருக்கப் பருக்கைக் கல்லின் நெடுங்குன்றிற் பிலஞ்சேர, பாம்புக் கூட்டம் போராடும் பாழ் நிலத்தை, அந்நாளில், உழைப்பாளர் தம் தோளுழைப்பால் உருவாக்கிய பின்னரே, அது விலைபோகும் நிலைமைக்கு வந்தது. பூமிக்கடியில் கிடந்துறங்கும் வரையில் பொன்னுக்கும், வைரத்திற்கும் விலை கிடையாது. அவற்றைப் பாட்டாளிகள், தம் உழைப்பினைக் கொடுத்து, வெளியே கொண்டுவரும் போதுதான், அவை விலைபோகிறது. ஆகவே விலையில்லாத பொன்னுக்கு விலை கொடுத்துவாங்கும் நிலையை உண்டாக்கிய உழைப்புக்கே, கொடுக்கும் விலை உரிமையுடையதாகிறது. இதுபோன்றே கடலிற் கிடக்கும் முத்தும், காடுகளில் விளையும் அகிலும் தேக்கும், மலையிற் கிடக்கும் மாணிக்கமும், ஆறுகளில் தேக்கிய தண்ணீரும், அது பாயும் விளைநிலமும், விளைநிலத்தில் விளையும் பயிரும், பயிர்தரும் கதிரும், கதிரிலிருந்து எடுக்கப்படும் மணியும், அது தரும் உணவின் வகைகளும், மலையிலிருந்து பெயர்த்தெடுக்கப்படும் கல்லும், அது செதுக்கப்பட்டு கட்டப்படும் வீடும், காடுகளில் விளைவிக்கப்படும் பருத்தியும், அவற்றால் நெய்யப்படும் ஆடையும் விலை போகின்றன. அவை, அனைத்திற்கும் கொடுக்கப்படும் உண்மையான விலை, உண்மையான உழைப்புக்குப் போய்ச் சேரவேண்டிய உரிமையுடையதாகிறது. ஆனால் அப்படிச் சேரவிடாமல், இடையிலுள்ள தரகர்களுக்கும், ஏமாற்றுக்காரர்களுக்கும் போய்ச்சேரும்படியான நிலை ஏற்பட்டிருக்கிறது. அந்த அநீதியான நிலை மாற, தரகர் நிலையிலுள்ளோரை உழைப்பாளர் உலகத்திற்குக் கொண்டுபோய்த் தள்ளி, எல்லோரும் உழைப்பாளர் பட்டியலில் வரும்படி செய்து, அப்பொழுது உழைப்பால் கிடைக்கும் வளமை அதாவது பலனை, எல்லோரும் தேவையான அளவுக்குப் பெறும்படியான நிலைமையை உண்டாக்கப் பாடுபடுவதே 'மே நாள்' உலக மக்களுக்குக் கற்பிக்கும் பாடமாகும். "சக்திக் கேற்ற உழைப்பு, தேவைக் கேற்ற வசதி" இது புத்துலகச் சிற்பிகளின் புரட்சித் திட்டமாகும்.

(16-ம் பக்கம் பார்க்க)

# வர்க்கப் போராட்டம் வளர்ந்த விதம்!

## புரட்சிக்கீதம் பிறந்த முறை!

## இரண்டு நூற்றாண்டுகள்—இணையற்ற வளர்ச்சி!

★

[முதலாளி என்று ஒரு வர்க்கம் உருவானது எப்போது, தொழிலாளி என்று ஒரு இனம் ஏற்பட்டது எப்படி, இரு சாராருக்குமிடையே போராட்டம் மூண்ட வரலாறு யாது, தொழிற் புரட்சிக்கும் இந்த இரண்டு வர்க்க அமைப்புக்கும் உள்ள தொடர்பு யாது, சர்வதேச தொழிலாளர் முன்னணி எப்படி உருவாக்கப்பட்டது, சென்ற இருநூறு ஆண்டுகளில் தொழிலாளர் இயக்கம் எப்படி வளர்ந்திருக்கிறது ஆகிய இந்தப் பிரச்சினைகளைச் சுருக்கமாகவும் தெளிவாகவும் விளக்குகிறது இந்தக் கட்டுரை.]

உலகச் சரித்திரத்தில் 18-வது நூற்றாண்டின் இறுதிக்காலம் குறிப்பிடத் தக்கது. வீட்டிற்கொரு இராட்டினமும், கட்டுப் பஞ்சும் வைத்துக்கொண்டு நாளுக்கொரு முழம் துணி தயாரித்துக் கொண்டிருந்த நிலை ஒழிந்து, ஒரே நாளில் ஆயிரக் கணக்கான கெஜம் நீளமுள்ள துணிகளைத் தயாரிக்கக் கூடிய இயந்திரங்களைக் கண்டு பிடித்தனர். குடிசைத் தொழில் முறை அகற்றப்பட்டு, தொழிற்சாலை முறை வளர ஆரம்பித்தது. நெசவு இயந்திரங்களும், மற்றும் பல இயந்திரங்களும் கண்டுபிடிக்கப்பட்டன. இயந்திரங்களை வாங்கி ஆலைகளை உண்டாக்கும் பணியைப் பிரபுக்கள் செய்தனர். தனிப்பட்ட மனிதன் தன் தேவைக்கேற்ற அளவு உற்பத்தி செய்யும் வழக்கம் போய்விட்டது. ஒரே நாளில் பல தொழிலாளர்கள் சேர்ந்து புதிதாகக் கண்டு பிடிக்கப்பட்ட இயந்திரங்கள் மூலம் அதிகமான அளவுக்குச் சாமான்களை உற்பத்தி செய்தனர்.

குடிசைத் தொழில் ஒழிந்து ஆலைத் தொழில் ஏற்பட்ட இந்த மாறுதலுக்குத்தான் "தொழிற் புரட்சி" என்று பெயர்.

தொழிற் புரட்சி ஏற்பட்ட பிறகு தான் தொழிலாளி-முதலாளி என்ற வர்க்கம் தெளிவாக ஏற்பட்டது. உழைக்க ஓர் கூட்டம், உழைப்பின் பலனை அனுபவிக்க ஓர் கூட்டம் என்ற நிலை உண்டாகியது, ஐரோப்பிய தேசங்கள் ஒவ்வொன்றிலும் தொழிற் சாலைகள் பெருகின. உற்பத்தியும் அதிகமாயிற்று. குறைந்த நேரத்தில், மிகக் குறைந்த உழைப்பைக் கொண்டு, குடிசைத் தொழிலாளர்கள் தயாரித்ததை விடப் பன்மடங்கு அதிகமான பண்டங்களை ஆலை முதலாளிகள் தயாரித்தனர். அதனால் அவர்கள் குறைந்த விலையில் பண்டங்களை விற்க முடிந்தது. இது குடிசைத்தொழிலுக்குப்பேரிடியாகியது மக்கள் குறைந்த விலையில் விற்கும் ஆலை சாமானை வாங்கினரே தவிர, குடிசைத் தொழிலாளர்கள் தயாரித்த பொருள்களைத்திரும்பிப்பார்க்கவும் மறுத்தனர். இதனால் பரம்பரையாக குடிசைத் தொழிலில் ஈடுபட்டிருந்தவர்கள் பாடு திண்டாட்டமாயிற்று. ஆலையுடன் போட்டி போடக்கூடிய அளவுக்குக் குறைந்த விலைக்குப் பொருள்களை உற்பத்தி செய்ய வேண்டியவர்களானார்கள். இது முடியாத காரியம்.

ஆகவே தொழிற் புரட்சி ஏற்பட்ட சில ஆண்டுகளுக்கெல்லாம் குடிசைத் தொழில் செய்து வந்தவர்களிடையே பெரும் மாறுதல் ஏற்பட்டது. அவர்கள் தனிப்பட்ட முறையில் ஆலைகள் ஆரம்பிக்க இயலாதவர்கள். ஆகவே அவர்களும் தொழிற்சாலைகளில் கூலியாகச் சென்றார்கள். இந்த மாறுதல் ஏற்பட்ட பிறகு தொழிலாளி, முதலாளி என்ற இரண்டு வர்க்கம் எல்லாத்தேசங்களிலும் ஏற்பட்டது. இதற்கிடையில் 19-வது நூற்றாண்டின் ஆரம்பத்தில் புகை வண்டி கண்டு பிடிக்கப்பட்டு பழக்கத்திற்கு வந்து விட்டது. இதனால் ஒரு தேசத்திற்கும், மற்றொரு தேசத்திற்குமிருந்த தொடர்பு அதிகமாகியது. ஒரு நாட்டிலிருந்து மற்றொரு நாட்டிற்குத் தேவையான முக்கிய பொருள்களை சுலபமாகப்பெற்றுக் கொள்ள முடிந்தது. இந்தப்பண்ட மாற்று வியாபாரத்தைச் சுலபமாக முதலாளிகள் செய்தனர். முதலாளி வாக்கம் வளர வளர உலக முதலாளிகளுக்குள் சுலபமாக ஒற்றுமை ஏற்பட்டது.

தொழிலாளியிடமிருந்து எந்த அளவு வேலை பெற முடியுமோ அவ்வளவையும் முதலாளிகள் உறிஞ்சினர். தொழிலாளிகள் சார்பாகப் பேசுவதற்கு ஆட்கள் யாருமில்லை. அவர்களுக்கே உணர்வு வரவில்லை. எப்படியாவது உயிர் வாழ்ந்தால் போதுமென்று கொடுத்த கூலியை வாங்கிக் கொண்டு வேலை செய்தனர். இதுதான் 19-வது நூற்றாண்டின் ஆரம்பத்தில் தொழிலாளர் நிலை.

இங்கிலாந்தில் குடிசைத் தொழிலாளருக்கு ஏற்பட்ட ஆபத்து விவசாயிகளுக்கும் ஏற்பட்டது. நிலமி

இயந்திரம் ஏற்பட்ட பிறகு பிரிட்டிஷ் முதலாளிகள் கனடா, அமெரிக்கா, இந்தியா முதலிய நாடுகளிலிருந்து தானியங்களைக் கொண்டு வந்து குறைந்த விலைக்கு விற்க ஆரம்பித்தனர். இந்தச் சமயத்தில் ஆங்கில நாட்டு உழவர்கள் இன்னும் பழைய முறையிலேயே விவசாயம் செய்துவந்தனர். ஆகவே அவர்களால் பிறநாட்டு தானியங்களுடன் போட்டிப் போட்டுக் கொண்டு விற்க முடியவில்லை. அதனால் அவர்கள் வாழ்வும் சிதைய ஆரம்பித்தது. தங்களுக்கிருந்த சொற்ப நிலங்களையும் விற்றுவிட்டு எங்கேயாவது கூலிவேலை கிடைத்தால் போதும் என்று சுற்ற ஆரம்பித்தனர் ஆங்கில நாட்டு உழவர்கள்.

இம்மாதிரி மத்தியதர வகுப்பு என்ற ஒரு வகுப்பையே அழித்து முதலாளி, தொழிலாளி என்ற வகுப்புகள் ஏற்பட்டன.

அந்தக் காலத்தில் தொழிற்சாலைகளில் எந்த விதமான வசதியும் கிடையாது. முதலாளியும் அவன் ஏஜெண்டுகளும் வைத்தது தான் சட்டம். தொழிலாளர்க்கென்று ஒரு மருத்துவசாலைகூட கிடையாது. அரை வயிற்றுக்கஞ்சியை ஊற்றி காலை முதல் மாலை வரை வேலை வாங்கும் முதலாளிகள் தாம் தோற்றமளித்தனர்.

பத்தொன்பதாவது நூற்றாண்டின் ஆரம்பத்தில் தொழிலாளர் அனுபவித்த துன்பம் அளவற்றது. தொழில்வளம்பெருகப் பெருக முதலாளிகளின் கொடுங்கோன்மை இன்னும் வளர்ந்து கொண்டே போயிற்று. இந்த நிலையில்தான் தொழிற் சங்கங்கள் தோன்றின.

தொழிற்சாலையில் வேலை செய்தவர்கள் தங்கள் குறைகளை முதலாளிகளுக்குத் தெரியப்படுத்த ஒரு கூட்டுறவுச் சங்கம் தேவை என்பதை உணர்ந்தனர். அதன் பலன் தான் ஆங்காங்கே சிறுசிறுதொழிற் சங்கங்கள் உற்பத்தியாயின. இம்மாதிரி சிறு சங்கங்கள் இங்கிலாந்தில் ஏராளமாக உண்டாயின. நாட்கள் செல்லச் செல்ல தொழிற் சங்கங்கள் தங்கள் பார்வையை பக்கத்துநாடுகளுக்கும் செலுத்தின. போக்கு வரவுசாதனம் அதிகமான காரணத்தால் ஒரு நாட்டுக்கும், மற்றொரு நாட்டுக்கும் ஏற்பட்ட தொடர்பு அதிகமாயிற்று.

இங்கிலாந்து தேசத்துத்தொழிலாளியும் பிரான்சு நாட்டுத்தொழிலாளியும் தங்கள் தேவைகள் ஒன்றே என்பதை உணர்ந்தனர். தொடர்புகள் அதிகமாக ஆரம்பித்ததும் அத்துடன் முதலாளிகளின் பிடி இறுக இறுக, ஒரு நாட்டுத் தொழிலாளிக்கும், மற்றொரு நாட்டுத் தொழிலாளிக்கும் ஒற்றுமை வளர ஆரம்பித்தது.

ஆனால் பல நாட்டுத் தொழிலாளரும ஒன்றுகூடிச் சங்கம் ஆரம்பிக்க வெகு நாட்களாயிற்று.

இந்தக் காரியத்திற்கு அடிப்படையாக பிரிட்டிஷ் தொழிற்சங்கம் அடிக்கடி வெளிநாட்டுத் தொழிற் சங்கங்களுடன் தொடர்பை உண்டாக்கிக் கொண்டேயிருந்தது. அவ்வப்பொழுது மற்ற நாட்டுத் தொழிலாளர் நிலை குறித்துத் தீர்மானங்கள் நிறைவேற்றுவது, கடிதங்கள் எழுதுவது இப்படிப்பல வேலைகளை பிரிட்டிஷ் தொழிற் சங்கம் தவறாமல் செய்து வந்தது.

1836-ல் பெல்ஜியம் தொழிலாளர் தலைவன் காட்ஸ் என்பவனை பெல்ஜிய அரசாங்கம் சிறையிலடைத்தது. இதைக் கண்டித்து சகோதர தொழிலாளிகளுக்குத் தங்கள் அனுதாபத்தைக் காட்டி ஒரு கடிதம் எழுதினர் பிரிட்டிஷ் தொழிலாளர் சங்கத்தார். இதைத் தொடர்ந்து சர்வ தேசிய தொழிலாளர் சம்மேளனம் ஒன்றை அமைப்பது குறித்து அறிக்கைகளை வெளியிட்டது பிரிட்டிஷ் தொழிற் சங்கம்.

ஸ்தாபன ரீதியாக சர்வதேச தொழிலாளர்கள் ஒன்றுபட வேண்டுமென்று பாடுபட்டவர்களில் மாஜினி என்ற இத்தாலி நாட்டுத் தலைவனும் ஒருவன். "யங் இத்தாலி" இயக்கத்தை ஆரம்பித்தவன். இத்துடன் "யங் ஐரோப்பா"வுக்காக அவன் தீவிரமாக உழைத்தவன். மாஜினி தொழிலாளர் தலைவர்களில் குறிப்பிடத்தக்கவன்..

1833-ல் பிரிட்டிஷ் தொழிற் சங்கத் தலைவர் லாவட் என்பவர் ஐரோப்பிய தொழிலாளருக்கு விரிவான அறிக்கையொன்று வெளியிட்டார்.

"செல்வத்தை உற்பத்தி செய்யும் சகோதரர்களே! நம்மை ஆளுபவர்கள் ஒன்றானபிறகு நாம் ஏன் தனித்து நிற்கவேண்டும்?" என்று லாவட் தன் அறிக்கையின் முடிவில் கேட்டிருக்கிறார். இந்த மாதிரி சர்வதேசிய அமைப்புக்காக இங்கிலாந்து முயன்றுகொண்டிருக்கும் போது பிரான்சும் இதே வழியில் முயற்சி செய்துகொண்டிருந்தது.

கடைசியாகப் பலருடைய முயற்சிக்குப் பிறகு 1839-ம் ஆண்டு ஒரு சர்வ தேசிய தொழிலாளரின் மகாநாடு கூட்டுவதென்று முடிவு செய்யப்பட்டது. இதில் பிரான்சும், இங்கிலாந்தும் முழுமுரமாக இருந்தன. ஆனால் எதிர்பாராத விதமாக இந்த மகாநாடு தடைப்பட்டது. லண்டனில் சார்ட்டிஸ்ட் இயக்கம் சம்பந்தமாக லாவட் கைது செய்யப்பட்டார். பிரான்சிலும் தலைவர்களுக்குள் தகராறு ஏற்பட்டது. ஆனாலும் தொழிலாளர்களின் கூட்டு முன்னணியைப் பற்றிய பிரசாரம் வலுவடைந்து கொண்டே போயிற்று. தொழில் புரட்சிக்குப் பிறகு தாங்கள் எந்த தேசத்திலிருந்தாலும் தங்கள் தேவைகள் ஒரே மாதிரிதான் என்பதைத் தொழிலாளர்கள் நன்கு உணர்ந்தனர். இந்த நிலையில்தான் தொழிலாளர் உலகத்தில் மார்க்ஸ் தோன்றினர். முதலாளிகளை ஒழிப்பதற்கென்று 1847-ல் 'கம்யூனிஸ்ட் லீக்' என்ற ஒரு சர்வ தேசிய இயக்கத்தை ஆரம்பித்தார். அதே வருடம் நவம்பரில் அதன் இரண்டாவது காங்கிரஸ் நடைபெற்றது. அதற்குப் பல நாட்டுப் பிரதிநிதிகள் வராவிட்டாலும மார்க்ஸும், ஏங்கெல்ஸும் வந்திருந்தனர். அந்தக் காங்கிரஸில் தான் மார்க்ஸ் தன் "கம்யூனிஸ்ட் அறிக்கையை" வாசித்து காண்பித்தார். "கம்யூனிஸ்ட் அறிக்கை"யில் தொழிலாளர்களின் விடுதலைக்குத் தெளிவான வழியை மார்க்ஸ் காட்டினார்' மார்க்ஸின் சித்தாந்தப்படி வர்க்க வேற்றுமைகள் காரணமாக வரலாற்றில் ஏற்பட்ட போராட்டங்கள், நில முறையிலிருந்து வியாபார அபிவிருத்தி, முதலாளிகளின் தோற்றம், உலக மார்க்கெட்டின் வளர்ச்சி, இவைகளால் தேசிய எல்லைகளைக் கடந்து உலக முழுமைக்கும் இரு வகுப்புகளே முதலாளி-தொழிலாளி என்று முடிவதை விரிவாகக் காட்டினார்.

அந்த அறிக்கை "உலகப் பாட்டாளி மக்களே; ஒன்று படுங்கள்!" என்ற அழைப்புடன் முடிகிறது. மார்க்ஸின் வேண்டுகோளின்படி

1848-ம் வருடம் உலகத் தொழிலாளர் காங்கிரஸ் கூடுவதாயிருந்தது. ஆனால் மறுபடியும் தடைப்பட்டது. இந்தத் தடவை இப்படி நேர்ந்ததற்குக் காரணம் அந்த வருடத்தில் ஐரோப்பாவில் நடந்த பொதுப் புரட்சியேயாகும். (முக்கியமாக பிரான்சிலும் ஜெர்மனியிலும்) இரண்டு தடவைகள் தடைப்பட்ட பிறகு 1863-ம் ஆண்டுதான் ஒரு முடிவுக்கு வந்தார்கள். அதன்படி 1864-ம் ஆண்டு சர்வதேசிய தொழிலாளர் சங்கத்தைக் கூட்டுவதென்றும் அதற்குச் சட்ட திட்டங்களைத் தயாரிப்பதென்றும் முடிவுசெய்து ஒரு கமிட்டியையும் நியமித்தனர். பலவித தகராறுகளுக்குப் பிறகு நிறுவப்போகும் சங்கத்திற்கு, சட்டதிட்டங்களைச் தயாரிக்கும் பொறுப்பு மார்க்ஸிடம் ஒப்படைக்கப்பட்டது. பலதிறப்பட்ட தொழிலாளர் வகுப்புகளுக்கு ஏற்றவாறு 'மார்க்ஸ்' ஒரு அறிக்கையையும் சட்ட திட்டங்களையும் தயாரித்தார்.

கடைசியாக 1866-ல் முதலாவது சர்வதேசியச் சங்கம் ஜினிவாவில் கூடிற்று. அந்தக் காங்கிரஸுக்கு பிரான்சு, பெல்ஜியம், ஸ்விட்ஸர்லாந்து, ஜெர்மனி, இங்கிலாந்து, முதலிய நாடுகளிலிருந்து பிரதிநிதிகள் வந்திருந்தனர். ஜினிவா காங்கிரஸ் விவாதித்த முக்கியமான சில விஷயங்கள் பின்வருமாறு:—

சர்வதேசிய அமைப்பின் முக்கியத்துவம், உபயோகம், இதுவரைக்கும் தொழிலாளர் நிலை, இனிமேல் மாறக்கூடிய நிலை, பெண் தொழிலாளர் நிலை, வரிவிதிப்பு இன்னும் பல.

ஜினிவா காங்கிரஸுக்குப் பிறகு முதல் சர்வதேசியச் சங்கம் சுறுசுறுப்பாக வேலை செய்ய ஆரம்பித்தது. 1867-ல் பிரான்சிலும், இங்கிலாந்திலும் நடந்த வேலை நிறுத்தம் முதல் சர்வதேசியச் சங்கத்திற்கு ஒரு நல்ல சந்தர்ப்பத்தைத் தேடிக் கொடுத்தது. உலகத் தொழிலாளர்களின் கூட்டு முன்னணி அப்பொழுது நன்றாகப் பயன்பட்டது. பிரான்சு நாட்டுப் பித்தளை தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்தபோது ஆங்கில நாட்டுத் தொழிற் சங்கங்கள் மூலம் ஆயிரக்கணக்கில் பணம் வசூலிக்கப்பட்டு அவர்களுக்கு உதவிநிதியாக அனுப்பப்பட்டது. வேலை நிறுத்தத்தை வெற்றிகரமாக நடத்த இந்தப் பொருளுதவி மிகவும் பயன்பட்டது. இதேமாதிரி இங்கிலாந்தில் தையற்காரர்கள் வேலை நிறுத்தம் செய்தபொழுது ஐரோப்பிய தேசங்கள் பொருளுதவி செய்தன.

இம்மாதிரி சர்வ தேசிய அடிப்படையில் தொழிலாளர்கள் ஒன்றுபட்டிருப்பதில் உள்ள நன்மை நாளடைவில் தெளிவுபடலாயிற்று. அதன் பலனாக பல தொழிற்சங்கங்கள் முதல் சர்வதேசியத்தில் அங்கத்தினர்களாயினர். அங்கத்தினர்களின் எண்ணிக்கை அதிகமாயிற்றே ஒழிய சங்கத்திற்கு வரவேண்டிய அங்கத்தினர் கட்டணங்கள் வசூலாகவேயில்லை. ஒவ்வொரு தேசத்திலும் அதிகமான அளவுக்கு பாக்கி நின்றது.

1869-70-ல் இந்தநிலை இன்னும் முற்றிவிட்டது. எதிர்பார்த்த அளவுக்கு வசூல் பணம் வரவில்லை. தேசிய சங்கமிருந்த கட்டிடத்திற்கு வாடகையும், அங்கு வேலை பார்த்த காரியதரிசிக்கு சம்பளமும் கொடுக்கப் பணமில்லை. ஆனாலும் சங்கத்திற்கு மதிப்பு உயர்ந்திருந்தது. ஒரு நாட்டு தொழிலாளி, மற்றொரு நாட்டானை சகோதரன் என்று நினைக்கும் மனப்பான்மை வளர்ந்தது. இந்தச் சமயத்தில் தொழிலாளர் தலைவர்களுக்குள் தகராறு ஏற்பட்டது.

சர்வதேசியச் சங்கத்தைப்போலவே தனிப்பட்ட முறையில் தொழிலாளர்களின் ஒற்றுமைக்காகப் பாடுபட்டு வந்தவர் பகுனின் என்பவர். இவருக்கும், மார்க்ஸுக்கும் கொள்கை வேற்றுமை ஏற்பட்டது. மார்க்ஸ் துண்டு துண்டாகக் காரியங்களை செய்யாமல் விரிவான அடிப்படையில் கம்யூனிஸ்ட் கட்சியை ஆங்காங்கே நிறுவ ஆரம்பித்தார். அவருக்கு உதவியாக அவர் தோழர் எங்கெல்ஸ் 1870-ல் தன் வியாபாரத்தை விட்டுவிட்டு மார்க்ஸுடன் வேலை செய்ய ஆரம்பித்தார். இதனால் மார்க்ஸுக்கென்று முதல் சர்வதேசியச் சங்கத்தில் ஒரு தனிப்பட்ட கூட்டம் உண்டாகிவிட்டது. நாளடைவில் அவர் சக்தி வளர ஆரம்பித்தது. இது பகுனின் போன்றவர்களுக்குப் பிடிக்கவில்லை. மார்க்ஸ் சர்வதேசிய சங்கத்தையே கைப்பற்றி அரசாங்கங்களைக் கவிழ்க்கப் பார்க்கிறார் என்று பகுனின் குற்றம் சாட்டினார். இந்தப் போராட்டத்தினிடையில் 1872-ஹேக் நகரில் சர்வதேசியச் சங்கத்தின் காங்கிரஸ் கூடிற்று. இதில் பகுனின் கட்சியார் மார்க்ஸைத் தொலைத்துவிடுவது என்று எண்ணியிருந்தனர். அதற்கேற்றாற்போல் அவர்களுக்குப் பெரும்பான்மையாக வோட்டுமிருந்தது. ஆனால் இந்த காங்கிரஸுக்கு மார்க்ஸே நேரில் வந்துவிட்டார். அவரே வந்தபிறகு பகுனின் கோஷ்டியார் என்ன செய்ய முடியும்? பகுனினைச் சேர்ந்தவர்களையெல்லாம் சங்கத்திலிருந்து மார்க்ஸ் வெளியேற்றினார். அதே காங்கிரஸில் அவருக்கு 65 சதவிகிதம் வோட்டுகிடைத்தது! ஐரோப்பிய தலைவர் தகராறிலிருந்து தப்புவிப்பதற்காக முதல் சர்வதேசிய சங்கத்தின் தலைநகர் லண்டனிலிருந்து நியூயார்க்குக்கு மாற்றப்பட்டது. அதற்குப் பிறகு சர்வதேசியச் சங்கமே மறைய ஆரம்பித்துவிட்டது. பல ஆயிர மைல்களுக்கப்பாலுள்ள நியூயார்க்குடன் தொடர்புகொள்ள ஐரோப்பிய தொழிலாளர்கள் மறுத்தனர். இத்துடன் பகுனினுக்கும், மார்க்ஸுக்கும் ஏற்பட்ட தகராறு முற்றியது. கடைசியாக 1876-ல் மார்க்ஸே முதல் சர்வதேசியச் சங்கத்தைக்கலைத்துவிட்டதாக அறிவித்தார். பின்னும் இரண்டு வருடங்கள் கழித்து பகுனின் கட்சியாரும் தங்கள் அமைப்பைக் கலைத்தனர். 1876 உடன் முதல் சர்வதேசியத் தொழிலாளர் சங்கம் ஒழிந்தது. இது கலைக்கப் பட்டதற்கு இன்னும் சில காரணங்கள் உண்டு.

பொதுவாக ஆரம்ப காலத்தில் இங்கிலாந்து நாட்டுத் தொழிலாளர்கள்தான் இதில் அதிக ஆரவம் காட்டினர். ஆனால் சர்வ தேசியச் சங்கம் பரவ ஆரம்பித்த பிறகு பிரான்சு, ஜெர்மனி முதலிய தேசங்களிலுள்ள தொழிலாளர்களும் சேர்ந்தனர். அவர்களில் பெரும்பான்மையினர் தீவிர வாதிகளாயிருந்தார்கள்; தீவிர வாதம் ஆங்கில நாட்டிற்குப் பிடிக்காத விஷயம். அத்துடன் கம்யூனிஸ்டுகளுக்குச் சங்கத்தில் இடம் கிடைத்தது. பிரிட்டிஷ் தொழிலாளர் தலைவர்களுக்குப்பயம் வந்தது. தொழிற் சங்க நடவடிக்கையை மீறி அரசியல் துறைகளிலும் சர்வ தேசியச் சங்கம் வேலைசெய்ய ஆரம்பிக்குமோ என்று பயந்தனர்.

இத்துடன் மற்றொரு முக்கியமானவிஷயம், சர்வ தேசியதொழி

லாளர் சங்கத்தைக் கலைக்க உதவியது அதுதான் தேசியம். 1870-80 ஆண்டுகளில் சர்வதேசிய மனப்பான்மை குறைந்து ஒவ்வொருவரும் அவரவர் நாட்டு நலனைக் கவனிக்க ஆரம்பித்தனர். சர்வதேசியமனப்பான்மை தளரத்தளர சர்வ தேசியச் சங்கமும் தன் பலத்தை இழந்துகொண்டே வந்து கடைசியாக அழிந்தது.

ஆனால் முதல் சர்வ தேசியச் சங்கத்திற்கு தொழிலாளர் உலகில் ஒரு தனி இடம் உண்டு. அதுதான் முதன் முதலாக சர்வ தேசியரீதியில் தொழிலாளரின் நலனைக் கவனிக்க ஆரம்பிக்கப்பட்ட சங்கம். தொழிலாளர்களின் பரஸ்பர ஒற்றுமைக்கு வழி கோலிய முதல் சங்கம் அது.

அதற்குப் பிறகுதான் பலதேசத்து தொழிலாளர் தலைவர்களும் ஒன்றுகூடிப் பேச ஆரம்பித்தனர்.

திட்டமாகச் சுட்டிக்காட்டும் வகையில் எந்தக் காரியத்தையும் முதல் சர்வ தேசியச்சங்கம் சாதிக்காவிட்டாலும், அது போட்ட கோஷங்கள் தொழிலாளரின் அடிப்படைத் தேவைகளை மக்கள் முன்னிலையில் கொண்டுவந்து வைத்தது.

ஒரு நாளைக்கு எட்டுமணிநேர வேலை, சர்வ தேசிய தொழிற்சங்க சம்மேளனம் நிறுவவேண்டிய அவசியம், தொழிலாளர் நலனைப் பாதுகாக்கும் தேசியச் சட்டங்களை நிறைவேற்ற வேண்டிய அவசியம் இன்னும் பல சர்வ தேசிய சங்கத்தார் பிரசுரப் படுத்திய விஷயங்களாகும்.

முதல் சர்வ தேசியச் சங்கம் கலைக்கப்பட்டபிறகு அந்தந்த தேசங்களில் தொழிலாளர் சங்கங்கள் பெருகின. நாளடைவில் தொழிற்சங்கங்களிலும் பிளவுகள் ஏற்பட்டன. சோஷியலிஸ்டுகள், மிதவாதிகள், கட்சிப் பற்றற்றவர்கள் என பல வழியில் தொழிற்சங்கங்கள் வளர்ந்தபோதிலும் சர்வ தேசிய அமைப்பு ஏற்படுத்துவதைக் குறித்து 1888-க்கு முன் எந்த முயற்சியும் நடைபெறவில்லை. பிரிட்டிஷ் தொழிற்சங்கம் 1888-ல் இரண்டாவது சர்வ தேசிய அமைப்பு ஒன்று ஏற்படுத்துவது குறித்து ஒரு மாநாட்டை பாரிஸில் கூட்டப்போவதாக அறிவித்தது. அதே சமயத்தில் ஜெர்மன் சோஷியலிஸ்டுகளும் ஒரு மாநாடு கூட்டுவதாக அறிவித்தனர். அவர்களும் பாரிஸையே மாநாட்டிற்கு இடமாகத் தேர்ந்தெடுத்தார்கள். இந்த நிலையில் இரண்டு மாநாடுகள் 1889-ல் பாரிஸில் கூடின. இரு மகாநாட்டினரையும் ஒன்று சேர்த்துவைக்கச்செய்த முயற்சிகள் பயன்படவில்லை. ஆனால் பல தேசங்களில் முதலாளிகள் செய்யும் அக்கிரமங்களையும், தொழிலாளர்களின் துன்பங்களையும் மாநாட்டிற்கு வந்திருந்த தலைவர்கள் ஒருவருக்கொருவர் சொல்லிக்கொண்டனர். இதன் பலனாக சோஷியலிஸ்டுகளும் மிதவாதிகளும் ஒன்றாகி மாநாட்டை ஆரம்பித்தனர். இந்த மாநாட்டிற்கு அமெரிக்கத் தொழிலாளர் பெடரேஷன் வாழ்த்துச்செய்தி அனுப்பியிருந்தது. அந்த வாழ்த்துச் செய்தியில்தான் "மே மாதம் முதல் தேதியை" தொழிலாளர் தினமாகக் கொண்டாடவேண்டுமென்று அமெரிக்கர்கள் கேட்டுக்கொண்டிருந்தனர். அதன்படி பாரிஸ் காங்கிரஸ் மே முதல்தேதியைத் தொழிலாளர் தினமாகக் கொண்டாடத் தீர்மானித்தது. இது இன்னும் நிச்சயமாக 1891-ல்ப்ரெஸல்ஸ் காங்கிரசில் தீர்மானிக்கப்பட்டது. இப்படியாக இரண்டாவது சர்வதேசியச் சங்கம் தொடங்கிப் பெற்றது.

ஆனால், சர்வதேசிய சங்கத்திற்குள் பல கட்சிகளிருந்தன. சோஷியலிஸ்டுகள் ஒருபுறம், மிதவாதிகள் ஒரு புறம், மார்க்ஸிய வாதிகள் மற்றொரு புறம் இப்படிப் பல வகுப்புகள் இருந்தன. அந்தந்த கட்சிக்குத்தனிப்பட்ட அமைப்பு வேறு உண்டாகியது. 1904-ல் பாரிஸில் கூடிய சோஷியலிஸ்ட் காங்கிரஸ் சர்வதேசிய சோஷியலிஸ்ட்ஸ்தாபனத்தை உண்டாக்கியது. இந்த சோஷியலிஸ்ட்ஸ்தாபனத்தை தனக்கு சாதகமாகக் கொண்டு இரண்டாவது சர்வ தேசிய சங்கம் வளர ஆரம்பித்தது. 1904-ல் ஆம்ஸ்டெர்டாமில் கூடிய காங்கிரஸ் இதைச் செவ்வனே செய்து முடித்தது, அதற்குப் பிறகு சோஷியலிஸ்ட் ஆதிக்கத்தில்தான் சர்வதேசிய சங்கம் வளர ஆரம்பித்தது. இதற்குள் ஐரோப்பிய நாடுகள் யுத்தத்தால் பாதிக்கப்படுமோ என்ற பீதி ஏற்பட்டது. சண்டை ஏற்பட்டால் தொழிலாளர்களின் நிலை என்ன? இந்தக் கேள்விக்கு இரண்டாவது சர்வதேசிய சங்கம் கொடுத்த பதில் தெளிவாக இருந்தது. யுத்தங்கள் முதலாளித்துவ முறையினால்தான் உண்டாக்கப்படுகின்றன. அது தொழிலாளிகளுக்கு ஆபத்தைக் கொடுக்கும். சண்டையை ஒழிக்க முதலாளி வர்க்கத்தையே ஒழிக்கவேண்டுமென்று கூறினர் சர்வ தேசிய சங்கத்தார். நாட்களாக ஆக யுத்தத்தின் பீதி ஐரோப்பாவைச் சூழ்ந்துகொள்ள ஆரம்பித்தது. எப்படியாவது யுத்தம் வராமல் தடுக்க வேண்டியதுசர்வதேசியசங்கத்தின் கடமை. கடைசியாக சங்கம் பின்கண்ட தீர்மானத்தை நிறைவேற்றியது. "யுத்தம் ஏற்படாதவாறு அந்தந்த அரசாங்கத்திலிருக்கும் தொழிலாளர் பிரதிநிதிகள் முயல வேண்டும். அப்படி அவர்களால் முடியாமல்போனால் யுத்தத்தினால் ஏற்படும் அரசியல் பொருளாதார நெருக்கடிகளைத்தங்களுக்குச் சாதகமாக்கிக்கொண்டு தொழிலரசை நிறுவவேண்டும்."

அந்த அறிக்கை பலருக்குச் சரியாகவிருந்த போதிலும், சிலர் இன்னும் தீவிரமான முடிவை எதிர்பார்த்தனர். அவர்கள், யுத்த முயற்சிகளைப் பாழாக்க, ஒவ்வொரு தேசத்திலும் தொடர்ந்தாற்போல் வேலை நிறுத்தங்களை ஆரம்பிக்க, யோசனை கூறினார்கள். ஆனால் இந்த தீவிர வாதங்கள் பலனளிக்கவில்லை. சண்டை ஆரம்பிக்கும்வரை எல்லாத் தொழிலாளரும் அதை ஒழிப்பதுபற்றி பேசி வந்தனர். ஆனால், சண்டை ஆரம்பித்த பிறகு, ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் தேசத்தின் பாதுகாப்பைக் கவனிக்க ஆரம்பித்தனர். நிபந்தனையற்ற ஒப்பந்தத்தின்பேரில், அரசாங்கம் யுத்தத்தில வெற்றிபெற, உதவினர். சர்வ தேசியம் மறுபடியும் மறைந்தது. ஒவ்வொரு நாட்டுத் தொழிலாளர்களும் போர்க்கருவிகளைச் செய்வதில் முனைந்தனர். இரண்டாவது சர்வதேசிய சங்கம் மறைந்தது.

மகா யுத்தம் (1914-18) முடியும் வரை, தொழிற் சங்கங்களின் நாடுகள் யுத்தத்தில் வெற்றி பெற, உதவினர். சர்வ தேசியம் மறுபடியும் மறைந்தது. ஒவ்வொரு நாட்டுத் தொழிலாளர்களும் போர்க்கருவிகளைச் செய்வதில் முனைந்தனர். இரண்டாவது சர்வ தேசிய சங்கம் மறைந்தது.

(9-ம் பக்கம் பார்க்க)

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

கள். தொழிற்சாலையில் யந்திரத்தைச் சுற்றுகிறார்கள். மோட்டார் ஓட்டி உலகத்தைச் சுற்றுகிறார்கள். ஆமாய் விமானத்தையோட்டி வானவீதியைச் சுற்றுகிறார்கள். நமது நாட்டிலும் பெண்கள் சுற்றுகிறார்கள், நாள்தோறும் அரசமரத்தை.

இந்த நவீன நாகரீக நாட்களிலும் இது நடைபெற்று வருகிறது, கிராமங்களில் பாத்திரமல்ல, மின்சார ஒளிவீசும் நகரங்களில் கூட.

பகுத்தறிவுக் கதிர் வீசுகின்ற இந்த நாகரிக நாட்களிலே பார்த்தவர்கள் சிரிப்பார்களே என்ற வெட்கம் சிறிதுமின்றிப் பாலனைவேண்டி மரத்தைச்சுற்றுகிறார்கள். என்றால், மதமும், சாஸ்திரமும், மூட நம்பிக்கையும் 'எக்ஸ்ரே' ஒளிக்கதிர்கள் கூட ஊடுருவ முடியாதபடி எவ்வளவு கெட்டியாய், ஆழமாய் அவர்கள் நெஞ்சில் வேர் விட்டிருக்கிறது என்பதைச்சிந்தித்துப் பாருங்கள்.

இதிலென்ன தவறு? யாருக்கு என்ன நஷ்டம்? என்று கேட்கலாம் நண்பர்கள் அரசமரத்துக்குக் கலியாணம் செய்விப்பது, பின்பு அதனைச் சுற்றுவது என்பது தனிப்பட்டவரைச் சார்ந்ததல்ல, பகிரங்கமாக நடக்கிறது. அதன் விளைவு மனித சமுதாயத்தையே கடுமையாகப் பாதிக்கிறது. ஆதலின் அது தவறு மாத்திரமல்ல, தற்கொலை; நஷ்டம் மட்டுமல்ல, நாசவேலை என்று கூறுகிறோம், எப்படியெனில், அய்யர் அரசமரத்துக்கு ஆடம்பரமாய்க் கலியாணம் செய்துவைத்தது அறிவு விளக்கம் பெறாத பாமரரிடையே ஒரு பிரமிப்பை உண்டு பண்ணுகிறது. அந்தப் பிரமிப்பு "அரசமர மகாத்மியம் உண்மையாயுமிருக்கலாம், இல்லாவிட்டால் இப்படியெல்லாம் செய்வார்களா?" என்று நம்பச் செய்கிறது. அந்த நம்பிக்கை பகுத்தறிவை மாய்த்துப் பக்தியை ஊட்டுகிறது. பக்தி மனிதனைப் பைத்தியமாக்குகிறது, மரக்கட்டையாக்குகிறது, நடைப்பிணமாக்குகிறது. இது தற்கொலையைக் காட்டிலும் கொடியதல்லவா?

அரசமரத்திலே மகிமை காணும் அறியாமை, கண்ணிலே கண்டதை மறந்து காணாததை நம்பச் செய்கிறது. சரீர சாஸ்திரத்தை விட்டு மூட சாஸ்திரத்தை நம்பச் செய்கிறது. விஞ்ஞானத்தை விட்டு அஞ்ஞானத்தை ஏற்கச் செய்கிறது. பகுத்தறிவை விட்டுப் பாவ புண்ணியத்தை நம்பச் செய்கிறது. இயற்கை விதியை மறந்து தலைவிதியை நோகச் செய்கிறது. இவ்வுலகை வெறுத்து மறுவுலகைத் தேடச்செய்கிறது. இது மானக்கேடு மட்டுமல்ல கொடிய மனக்கேடும் அல்லவா?

அந்நியரிடமிருந்து விடுதலை பெற்ற நம் நாடு முன்னேற வேண்டுமானால் அறியாமை ஒழிய வேண்டும், கல்வி பெருக வேண்டும், பகுத்தறிவு மேலோங்க வேண்டும் என்று ஒரு பக்கம் மேடைகளிலே முரசு முழங்கக் கேட்கிறோம். அதே சமயத்தில் அதற்கு விஷங்கொடுப்பதுபோன்று மறுபுறத்திலே அறியாமையின் சிகரத்தை எட்டிப் பிடிப்பதுபோல் அரசமரத்துக்குக் கலியாணங்கள் நடைபெற்று வருவதைக் காண்கின்றோம். எனவே, அறிவுப்பள்ளம் நிரப்ப வேண்டுமானால் நம் நாட்டிலுள்ள அறியாமைச் சிகரங்கள் அனைத்தும் தகர்க்கப்பட்டேயாக வேண்டும். அந்தத் தைரியம் நம் நாட்டிலுள்ள அனைவருக்கும் உண்டாகவேண்டும்.

---

(11-ம் பக்கத் தொடர்ச்சி)

1. பொதுச் சொத்துரிமை.
2. பொது உழைப்பு.
3. பொது லாப உரிமை.
4. பொதுப் பகிர்வு உரிமை.
5. பொது ஆட்சி உரிமை.

இந்த உரிமைகள் மக்களுக்கு ஆக, உரிமைப் போர்கள் துவக்கப்படவேண்டியிருக்கின்றன. அவை ஏற்படாமல் பார்த்துக் கொள்ள ஆணவ ஆட்சி புரியும் பணக்காரர்களும் தங்களாலான தடைகளைச் செய்து வருகின்றனர்.

**ஆனால் ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக அழுத கண்ணீரோடு தேம்பித் தவித்துத் தத்தளித்து நிற்கும் பாட்டாளி உலகம் கேள்விக் குறியாகவும், பின் அபாயக் குறியாகவும் மாறி வருகிறது! பாட்டாளிகள் ஆற்றாது அழுத கண்ணீர் ஆணவப் போக்கினரின் செருக்கையும் செல்வத்தையும் தேய்க்கும் படையாகும் என்பது மட்டும் உறுதி!**


# புத்தம் புதிய நூல்கள் !

## மு. கருணாநிதி

| | |
|---|---|
| களத்தில் கருணாநிதி | 1 0 |
| பெருமூச்சு | 1 0 |
| திராவிட சம்பத் | 0 3 |

## ஏ. வி. பி. ஆசைத்தம்பி

| | |
|---|---|
| தியாகச் சுடர் | 0 12 |
| பிணங்கள் | 1 0 |
| நினைவுச் சுழல் | 0 12 |

## மு. வரதராசனார்

| | |
|---|---|
| பச்சையப்பர் | 1 4 |
| மனச்சான்று | 1 12 |

## தங்கவேலர்

| | |
|---|---|
| நற்பணியாளர்கள் | 0 8 |

**பகுத்தறிவுப் பாசறை**

1ol, பிராட்வே சென்னை-1.


Edited Printed and Publi hed by P C. Manickavachagam alias Kanchi Manimoliyar at Free Printers 147, Coral Merchant St., Madras, Joint-Editor M. Ilancheliyan B.A: (Hons.)